பக்கங்கள்: பதினாறு+II=18

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 07 புதன்கிழமை (23.09.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 301

# அகதிகளின் மீள்குடியமர்வு; அமெரிக்கா மீண்டும் கரிசனை

## இலங்கையின் யுத்தக்குற்றம் குறித்த விசேட அறிக்கையும் சமர்ப்பிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 23

வன்னி யுத்தத்தில் இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள் உடனடியாக மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்பதில் தனக்குள்ள கரிசனையை அமெரிக்கா மீண்டும் வெளியிட்டிருக்கின்றது.

இதேவேளை - இலங்கையில் நடைபெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பாக அமெரிக்காவால் தயாரிக்கப்பட்டிருக்கின்ற விசேட அறிக்கை நேற்று முன்தினம் திங்கட்கிழமை அமெரிக்க காங்கிரஸிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தற்கொலைதாரியென பெண்ணொருவர் நேற்றுக் கைது

கொழும்பு, செப். 23

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட தேடுதலின்போது தற்கொலைதாரி எனச் சந்தேகிக்கப்படும் இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணைகளின்போது இந்தப் பெண் (16 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் - I பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் - I பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்

## அனைவருக்கும் பாதுகாப்பும் சுதந்திரமும் கொண்டதொரு சூழலை உருவாக்குவோம்

### வாகரையில் ஜனாதிபதி தெரிவிப்பு; தமிழிலும் அவர் பேசினார்



மட்டக்களப்பு, செப். 23

தாய் நாட்டுக்குத் துரோகம் விளைவிக்காமல் ஒரே கொடியின் கீழ் அழகிய தேசத்தைக் கட்டி எழுப்புவோம். இந்த நாட்டுப் பிரஜைகள் அனைவருக்கும் பாதுகாப்பும் சுதந்திரமும் கொண்ட ஒரு சூழலை உருவாக்குவோம் - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாகரையில் நேற்று அழைப்பு விடுத்தார்.

மட்டக்களப்பு வாகரை மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத்தை நேற்றுக்காலை திறந்து வைத்து உரை நிகழ்த்துகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

முப்பது வருட காலமாக அபிவிருத்தி எதுவும் மேற்கொள்ளப்படாத கிழக்கு மாகாணத்தில் (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் வருவதற்கான பாஸ் வழங்கும் நடவடிக்கைகள் ஈரப் பெரியகுளத்துக்கு மாற்றம்

கொழும்பு, செப். 23

வவுனியா கண்டி வீதியில் 'ரம்யா ஹவுஸ்' இராணுவ சிவில் அலுவலகத்தில் செயற்பட்டு வந்த யாழ்ப்பாணம் வருவதற்குரிய பாஸ் வழங்கும் நடவடிக்கைகள் தற்போது ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடிக்கு மாற்றப்பட்டுள்ளன.

வவுனியா நகரில் இருந்து சுமார் 7 அல்லது 8 கிலோ மீற்றர் தொலைவில் இந்த பாஸ் வழங்கும் அலுவலகம் இயங்கி வருவதால் பயணிகள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி முகாம்களில் நாளாந்தம் 30-40 பேர் கைதாகின்றனர் அல்லது கடத்தப்படுகின்றனர்

### நாடாளுமன்றில் மங்கள சமரவீர தகவல்

கொழும்பு, செப்.23

வவுனியா அகதி முகாம்களில் நாளாந்தம் 30 -40 பேர் காணாமல் போகின்றனர், கைது செய்யப்படுகின்றனர் அல்லது கடத் தப்படுகின்றனர் என்று தெரிவித்திருக்கின்றார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றியவேளை அவர் இதனைத் தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம் தமிழர்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கக் கோரி இந்திய ஜனாதிபதியிடம் மனு

புதுடில்லி, செப்.23

இலங்கையில் அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களை மீண்டும் அவரவர் வீடுகளிலேயே குடியமர்த்த இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி, இந்து மக்கள் கட்சியினர் டில்லியில் உள்ள இந்திய ஜனாதிபதி மாளிகையில் மனு அளித்தனர்.

டில்லியில் இந்து மதத்தைச் சேர்ந்த 18 அமைப்புகள் கடந்த இரண்டு நாள்களாக (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி ஆதரவாளர்கள் 2 பேர் அம்பாந்தோட்டையில் கடத்தல்!

கொழும்பு, செப். 23

தென் மகாணசபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட ஜே.வி.பி. ஆதரவாளர்கள் இருவர், அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் தலைமையிலான குழுவால் நேற்று கடத்தப்பட்டுள்ளனர் என்று ஜே.வி.பியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேசம் சதி செய்தால் அதை ஐ.நாவில் சொல்ல ஏன் தயங்குகிறார் மஹிந்த?

### ஐ.தே. கட்சி எம்.பி. கேட்கிறார் இப்படி

கொழும்பு, செப். 23

இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேசம் சதி செய்கிறது என்று கூறுகின்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதனை ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று அம்பலப்படுத்த ஏன் தயங்குகிறார்? இந்தக் குற்றச்சாட்டுகளை அவர் அலரி மாளிகையில் இருந்தபடி புலம்புவதில் என்ன பலன் கிட்டப்போகிறது?

இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல.

யுத்தத்திற்குப் பின்னர் ஜனாதிபதி தன்னை சர்வதேச சண்டியராகக் காட்ட முயல்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் இடம்பெற்றபோது அரசை விமர்சித்தவர்கள் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டனர்.

தற்போது அரசின் அருவருக்கத்தக்க செயல்கள் குறித்து தகவல்கள் வெளிவருகின்றபோது, சர்வதேசசமூகத்துடன் இணைந்து (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர்களுக்கு உதவும் விடயத்தில் ஆக்கபூர்வமாகச் செயற்படுகின்றது இந்தியா

### தமிழக எம்.பிக்களிடம் பிரதமர் மன்மோகன் சிங் உறுதி

புதுடில்லி, செப்.23

இலங்கைத் தமிழர்கள் விவகாரம் குறித்து தி.மு.க.; காங்கிரஸ் கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார்கள். டில்லியில் 'ரேஸ்கோர்ஸ்' சாலையில் உள்ள பிரதமர் இல்லத்தில் நேற்று இந்தச் சந்திப்பு நடந்தது.

டி.ஆர்.பாலு தலைமையில் தி.மு.க. எம்.பி.க்கள் ஆ.ராசா, கனிமொழி, தயாநிதி மாறன், ஜெகத்ரட்சகன், பழனிமாணிக்கம், டி.கே.எஸ்.இளங்கோவன், சுகவனம், வசந்தி ஸ்டாலின், (15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் மரணவிசாரணை அதிகாரி பதவிக்கான நேர்முகப்பரீட்சை யாழ். செயலகத்தில்

யாழ்ப்பாணம், செப். 23

குடாநாட்டில் திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை அடுத்த மாதம் 2 ஆம் 3 ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிப்பவர்கள் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித் தகைமைச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவையாளரின் சான்றிதழ், இரண்டு நற்சான்றிதழ்கள், மேலதிக தகைமைச் சான்றிதழ்கள், இளைப்பாறிய உத்தியோகத்தராயின் ஆதார ஆவணம் ஆகியவற்றின் மூலப்பிரதியுடனும் நிழற் பிரதியுடனும் வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் விவரம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு :-

**2.ஆம் திகதி சமுகமளிக்க வேண்டியவர்கள்**

**சாவகச்சேரி**

சின்னத்தம்பி இளங்கீரன், சசிகலா நாகராஜா, சத்தியவதி காண்டீபராஜ், கணபதிப்பிள்ளை ஜெயசீலன், இராசேந்திரம் தவமலர், கேசவலிங்கம் வளர்மதி, சிவசுப்பிரமணியம் ஜெய சங்கர் (கரவெட்டி).

**நல்லூர்**

குமார் கெங்காதரன், பரமநாதன் மோகனராஜ், பாக்கியவதி சிவநேசன், சகுந்தலாஜினி ரவீந்திரதாசன், தர்சினி சுதாகரன், முத்துக்குமார் உதயசிறி, இராசையா வர்ணகுமார் (பருத்தித்துறை).

**சண்டிலிப்பாய்**

இராஜரட்ணம் சரவணன், தம்பையா இரட்ணசிங்கம், மார்க்கண்டு சதீஸ்கரன், திருநாவுக்கரசு ஞானானந்தன், டேவிட் ஞானப்பிரகாசம் மேரி ஜோசப், இராஜரட்னம் வசீகரன், பரமேஸ்வரன் பவானி, ஐயன் மார்க்கண்டன், இன்னாசிமுத்து அன்ரன் விமலதாஸ், ஜெயரத்தினம் நிரோஷா, கோவிந்தராஜா சுரேஷ்குமார், கணபதிப்பிள்ளை பிரபாகரன், தர்மலிங்கம் ஸ்ரீகமலநாதன், யூலியா சுகிர்தரட்னம் ஸ்ரீனிவாசன், அன்ரனி ஜெராட் பாலேந்திரன்.

**பருத்தித்துறை**

குகராஜா கலைச்செல்வன், சிவஞானசிங்கம் சுகந்தன், வின்சன் டயான் அன்ரலா, சிவராசா சுரபாஸ்கரன், மோகன் அனுரா, செல்வராஜா இரட்னகுமார், ஜெயரட்னம் குணாளசிங்கம், வேலுப்பிள்ளை பாஸ்கரன், சின்னையா மோகனராஜா, சிவராஜா சதானந்தன், துரைராஜசிங்கம் கலைச்செல்வி, தர்மலிங்கம் செல்வமதி

**3 ஆம் திகதி சமுகமளிக்க வேண்டியவர்கள்**

**சங்கானை**

சிதம்பரம் மோகன், கந்தசாமி நந்தகுமாரன், திருஞானானந்தன் ஜெயறூபன்.

**கோப்பாய்**

பிரியந்தி பூபாலசிங்கம், கெங்காதரம் காண்டீபன், முத்துச்சாமி விக்கினேஸ்வரன், சிவலிங்கம் இதயதீபன்-

**வேலணை**

நாகராஜா தியாகராஜா, விசுவலிங்கம் பாலகுமார், ஆறுமுகம் நமசிவாயம் பிரேமகுமார்-

**உடுவில்**

சின்னப்பு செல்லர் நடராஜா, மகேந்திரன் தினேஷ், சோமலிங்கம் பரமநாதன், பரஞ்சோதி சஞ்சியகாந்த்-

**யாழ்ப்பாணம்**

சுபாசினி தெய்வேந்திரம், அன்ரன் பிறேம்நாத், கந்தசாமி நவநீதன்-

**தெல்லிப்பழை**

நாகராசா நவரட்ணராசா, சுப்பர் கதிர்காமலிங்கம், சற்குணம் தீபன், மார்க்கண்டு சதீஸ்கரன், ஞானதேவி சேகரன், விஜயரட்ணம் குறிஞ்சிக்குமரன், அப்பையா மதிபவனி, கந்தசாமி சுதாகரன்

**கரவெட்டி**

நமசிவாயம் கனகசபை சண்முகராஜா

**காரைநகர்**

பொற்கலை சிவநேசன்

**ஊர்காவற்றுறை**

தனநாயகம் ஜனனி- (1)


## புல்லாங்குழல் கலை இலவச வழிகாட்டல் நெறி

ஆரம்பம்: விஜயதசமி 28.09.2009

**V.K.சண்முகராசா**

**Rtd. G.S**

*36, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, அரியாலை.*

*021 3735836*

குறிப்பு:- புல்லாங்குழலுடன் வருக



ஓம் கணபதி துணை

## உதவிக் குருக்கள் தேவை

நான்கு நேர நித்திய பூசைகள் நடைபெறும் எமது தேவஸ்தானத்தில், பிரதம குருக்களுக்கு உதவியாகச் செயற்படுவதற்கு ஓர் உதவிக்குருக்கள் தேவை. இருப்பிட வசதி தேவைப்படின் ஆலய வீதியில் ஒழுங்கு செய்து தரப்படும். மாதச்சம்பளம் கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும். சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பம் 30/09/2009 ஆம் திகதிக்கு முன் எமக்கு அனுப்பிவைக்கவும்.

தலைவர்,
யாழ். அரியாலை நீர்நொச்சித்தாழ்வு,
ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்,
அரியாலை.


## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய மாணவன்
செல்வன் ரதீசனின் அன்பு அம்மப்பா

**வல்லிபுரம் பரமலிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

யாழ்.பல்கலைக்கழகம் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சிநிலைய 2 ஆம் அணி முழு நேர மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கௌசல்யா முரளிதரன்



சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌசல்யா முரளிதரன் நேற்று முன்தினம் (21.09.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் குமரையா - கமலாதேவி தம்பதியினரின் அன்பு மகளும் சரசாலையைச் சேர்ந்த கதிரேசன் தம்பதிகளின் அன்பு மருமகளும் முரளிதரனின் அன்பு மனைவியும், யசிந்தன், சிவகேமா, யதுஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் விஜயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2009) புதன்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாரதா வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.*

தகவல்:
குமரையா (தகப்பனார்).

# சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தரநியமனம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 23

யாழ். மாநகர சபையில் 10 சுகாதாரத் தொண்டர்கள் கடந்த 14 வருடங்களாகக் கடமையாற்றி வருகின்ற போதிலும், இது வரை நிரந்தர நியமனம் வழங்கப்படாமை குறித்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது யாழ். அலுவலகத்தில் சந்தித்து தங்களது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இவர்கள் தங்களது நிரந்தர நியமனம் குறித்து முறைப்பாடு செய்தமையைத் தொடர்ந்து அமைச்சர் யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவை அழைத்து மேற்படி சுகாதாரத் தொண்டர்களின் நியமனம் குறித்துக் கலந்துரையாடினார்.

அத்துடன் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா மேற்படி 10 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளார். (1)

## உள்ளே எட்டாம் பக்கத்தில்


இன்புளுவன்சா நோய்த்தாக்கம் குறித்த விழிப்புணர்வு பாதிப்பைக் கட்டுப்படுத்த உதவும் என்ற கட்டுரை இம்மாதம் ஒன்பதாம் திகதி எட்டாம் பக்கத்தில் வெளியான தொடர் கட்டுரையின் ஓர் அங்கமாகும்.

அதனை எழுதியவர்:

யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை விரிவுரையாளர் டாக்டர் இ.சுரேந்திரகுமாரன்

நீரிழிவு நோயாளருக்கான பிட்டு என்ற கட்டுரை இம்மாதம் 09 ஆம் திகதி வெளிவந்த புதன் பொய்கையில் தொடர்ந்து வெளிவரும் "உணவே மருந்து" தொடரின் 7 ஆவது பகுதியாகும்.

அதனை எழுதியவர்:

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர். கே. சிவசண்முகராசா M.D.(S)



## வீடு விற்பனைக்கு

கொத்தன் கலட்டி, வல்வெட்டி, வல்வெட்டித் துறையில் உள்ள 5 பரப்புக் காணியுடன் பெரிய வீடு [illegible] தரகர் தேவையில்லை.

[illegible] 0774042[illegible]4


# பொலிஸ் சேவை ஆள்சேர்ப்பு நேர்முகப்பரீட்சை திங்களன்று; இணைய முன்வருமாறு அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப்.23

குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களில் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றி பொலிஸ் சேவையில் இணையுமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரியுள்ளார்.

குடாநாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணி, சமூக முறைகேடுகளை தவிர்க்கும் முகமாகவும் சிவில் நிர்வாகத்தை ஒழுங்காக மேற்கொள்ள வசதியாகவும் யாழ். பொலிஸ் நிலையங்களில் குடா நாட்டைச் சேர்ந்தவர்கள் இணைத்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியமைக்கு இணங்க இந்த ஆள்சேர்ப்பு இடம்பெறவுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் (ஆண்/பெண்), சாரதிகள் மற்றும் உதவிப் பொலிஸ் அதிகாரி (எஸ்.ஐ) ஆகிய பதிவிகளுகே ஆள்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணி சமூக மட்டத்தில் நிலவக்கூடிய சீர்கேடுகளை அகற்றும் முகமாக மேற்படி வாய்ப்பினை ஒரு தொழிலாக மட்டுமற்றி ஓர் உன்னத சமூகக் கடமையாகக் கருதி இப்பதவிகளில் இணைந்து கொள்வதற்கு தகுதியானவர்கள் முன்வர வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

மேற்படி பதவிகளில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் அந்தந்த பிரிவுகளில் உள்ள பிரதேச செயலாளர், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் உரிய விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சு தெரிவித்தது. (1)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் யோ.இதயராஜன்
அவர்களின் அன்புத் தந்தை

**பொன்னுத்துரை யோகேஸ்வரராஜா**

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கோபுரம் சவுண்ட்ஸ்**
இல 38, மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை யோகேஸ்வரராஜா

(முன்னாள் தொழில்நுட்பவியலாளர், கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம், வவுனியா - பிரபல ஆங்கில, சிங்கள ஆசிரியர்)



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை யோகேஸ்வரராஜா நேற்று முன்தினம் (21.09.2009) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - முத்துரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு - தங்கரத்தினம் தம்பதியினரின் மருமகனும் செந்தூரன் (ஆசிரியர்- மன்னார் சித்திவிநாயகர் பாடசாலை), இதயராஜா (Graphic Designer, உதயன் பணிமனை), இதயகாந்தன் (HNDE, Civil Engineering, 2nd year) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கதிரவேற்பிள்ளை, நாகேஸ்வரராஜா, காலஞ்சென்ற காங்கேஸ்வரராஜா, மங்களேஸ்வரராஜா, வண்மலர்தேவி, பொன்மலர்தேவி, தவமலர்தேவி, ராசமலர்தேவி, பூமலர்தேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சண்முகராஜா, ராதா, தவராஜா (பிரதேச சபை, நல்லூர்), புஸ்பராசா, லிங்கராசா, தனராசா, தனவதி, இன்பம் ஆகியோரின் மைத்துனரும் சந்திரலாதாவின் அன்பு மாமனாரும் யதுநந்தனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல 12, இராமுப்பிள்ளை வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
*தொ. பே: 0213216608*

தகவல்: மனைவி,
பிள்ளைகள்,
பேரப்பிள்ளை.

### கொன்ஸ்ரன்ரைன் யோசேப்பு (ராசப்பா)



சிற்றம்பலபுரம், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கொன்ஸ்ரன்ரைன் யோசேப்பு 21.09.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கொன்ஸ்ரன்ரைன் (செல்லப்பா) - மரியமுத்து தம்பதியரின் அன்புமகனும் பெரியவிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற அக்கினேசின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மரீனா றெக்சிடாவின் அன்புத் தந்தையும், ஞானப்பிரகாசத்தின் அன்பு மாமனாரும் மறிற்றா, நன்சி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான மேரிபேர்ணடேற் (புஷ்பம்), யேசுதாசன் (முத்துராசா), றீற்றா மற்றும் மரியதாசன் (செல்லத்துரை), மாகிறேற் ஆகியோரின் அருமைச் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (24.09.2009) வியாழக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலியின் பின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கானை வீதி,*
*அச்சுவேலி.*

தகவல்:
மாகிறேற் (சகோதரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தென்னிலங்கை புரியவேண்டியவை

'நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய ஆய்வு' என்ற தலைப்பில் கொழும்பு 'மார்க்கா' நிறுவனத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆய்வுப்பட்டறை ஒன்றில் கருத்துரை வழங்கிய உயர்நீதிமன்றின் ஓய்வுபெற்ற நீதியரசர் ஸி.வி.விக்னேஸ்வரன் சில விடயங்களை - உண்மைகளை - பட்டவர்த்தனமாகவும், வெளிப்படையாகவும், அப்பட்டமாகவும் விவரித்துச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நாட்டின் பெருவாரியான மனங்களை ஆட்டிப்படைத்து நிற்கும் மாயைகள் நிறைந்த எண்ணங்கள் அல்லது தவறான கற்பிதங்களே தற்போதைய நெருக்கடி - முட்டுக் கட்டை - நிலைக்குக் காரணம் என்கின்றார் அவர்.

சரித்திரகாலம் தொட்டு, நிர்வாகத் தேவைகளுக்காக நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கப்படும்வரை, வடக்கும், கிழக்கும் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்களாகவே விளங்கி வந்தன. குறைந்த பட்சம் இந்த நாடு சுதந்திரம் பெறும்வரை அந்த நிலைமையே நீடித்தது என்பதை சனத்தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களை மேற்கோள்காட்டி உறுதிப்படுத்துகிறார் ஓய்வு பெற்ற நீதியரசர்.

இந்த நாட்டுக்கு 'சமஷ்டி முறை' ஆட்சியே உகந்தது என்பதை 1926 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா முன்மொழிந்தபோது தமிழர்களே அப்போது அதனை எதிர்த்தனர். வரட்சியான, கடுமையான காலநிலையும் நெருக்கடியான வாழ்க்கை முறையும் கொண்ட வடக்கு, கிழக்கில் தனித்து வாழ்வதை விட இலங்கைத் தீவின் ஏனைய சமூகங்களு டன் இணைந்து, சமாதானமாக வாழ்வது மேலானது என்று தமி ழர்கள் கருதியமையால் அவர்கள் பிராந்திய சுயாட்சி எதற் கும் அப்போது ஆதரவளிக்க முன்வரவில்லை. ஆனால் 1956 இல் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களம் மட்டும் என்ற சட் டமே பெரும்பான்மையின அரசியல் தலைவர்களின் மனதில் புதைந்து கிடந்த மறைவான நிகழ்ச்சித்திட்டம் குறித் துத் தமிழர்களின் அகக் கண்களைத் திறந்தது. அன்று முதல் இன்று வரை நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரசு ஆதரவுப் பின்னணியில் நடந்தேறிவரும் சம்பவங் கள், நிகழ்ச்சிகள் போன்றவை தமிழர்களின் இந்தச் சந்தே கங்களை வலுவடையச் செய்தன என்பதைச் சுட்டிக்காட்டு கிறார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

இத்தகைய சம்பவங்கள், நிகழ்ச்சிகளுள் அடங்குகின்ற அம்சங்களையும் நீதியரசர் வெட்டவெளிச்சமாகத் தொட்டுக் காட்டத் தவறவில்லை.

அரசு ஆதரவுடனான நிகழ்ச்சித் திட்டங்கள், இனக்கலவரங்கள் போன்றவை மூலம் தென்னிலங்கையிலிருந்து தமிழர்களை வடக்கிற்கோ, வெளிநாட்டிற்கோ விரட்டியடித்தல் -

பல நூற்றாண்டு காலமாகத் தமிழர்கள் வாழ்ந்த பாரம்பரிய பிரதேசங்களைத் திட்டமிட்ட அரச குடியேற்றங்கள் மூலமும், பின்னர் தற்காலத்தின் இராணுவ ஊடுருவல் மூலமும் ஆக்கிரமித்தல் -

போன்ற செயற்பாடுகளில் பெரும்பான்மையின அரசியல் வாதிகளின் பற்றுறுதிமிக்க ஈடுபாடு வலுவாகக் காணப்பட்டது.

இந்த நடவடிக்கைகள் மூலம் முதலில் தென்னிலங்கையிலும் பின்னர் வடக்கு, கிழக்கிலும் தமிழர்களின் குடிசனத் தொகை வீதம் கணக்கெடுக்க முடியாத எண்ணிக்கை வீதத்துக்கு மலினப்படுத்தப்பட்டது. ஒரு சமூகத்தின் தனித்துவத்தைச் சிதைத்தழித்துச் சின்னாபின்னமாக்கிச் சிதறிப்போகப் பண்ணும் ஆளும் சமூகத்தின் தந்திரோபாயத் திட்டம் இந் தப் போக்கில் புதைந்து கிடப்பதுபோல் தோன்றுகின்றது என் கிறார் விக்னேஸ்வரன்.

இலங்கைத் தீவில் மக்களின் மனக்குறைகள், மனத்தாக்கங்கள் பற்றி விவரித்த நீதியரசர் அவை இரண்டு வகைப்படும் என்கிறார். ஒன்று - நிஜமானது; வாஸ்தவமானது. மற்றது - மானசீகக் கற்பனையில் எழுந்தது; கற்பிதமானது.

இலங்கைத் தீவில் சிறுபான்மையினரின் மனத்தாங்கல்கள் நிஜமானவை. பெரும்பான்மை இனத்தவரின் மனக்குறைகள் கற்பனையானவை என்று துணிச்சலுடன் கூறுகின்றார் அவர்.

சிறுபான்மையினரைப் பொறுத்தவரை அவர்களுக்கு மொழி,மதம், காணி, கல்வி, பொருளாதாரம், அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்று நீளும் அம்சங்களில் பாதிப்பை ஏற் படுத்திய மனத்தாங்கல்கள் உண்மையானவை; யதார்த்தமானவை.

ஆனால், பொது - அரச சேவைகள், வர்த்தகம், வியாபாரம், தொழில் போன்ற துறைகளில் சிறுபான்மையினரின் பெரும் ஆக்கிரமிப்பு அளவுக்கு மீறி உள்ளதாக பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியை ஒட்டிய காலம் முதல் பெரும்பான்மையினருக்கு இருந்துவரும் மனத்தாங்கல் வெறும் அதீத கற்பனையே - மாயையே - என்று நீதியரசர் சுட்டிக்காட்டுவதை இலங் கையின் பேரினவாதிகள் புரிந்துகொள்ளவேண்டும்.

சுதந்திர இலங்கையின் ஆட்சிப்பீடமும், அதிகாரமும் பெரும்பான்மையினரான சிங்களவர்களின் கைகளில் அறுபது ஆண்டுகள் நீடித்துவிட்டன. இந்தக் காலத்தில் நடந்தேறிய சம்பவங்கள் மூலம் இதுவரை பெரும்பான்மையினருக்கு இருந்து வந்த இத்தகைய மானசீகக் கற்பனைகளுக்கும், மனத்தாங்கல்களுக்கும் அடிப்படையான காரணிகள் அத்தகைய ஆட்சிமுறை மூலம் தகர்த்தழிக்கப்பட்டு விட்டன என்ற உண்மையை அவர்கள் ஒப்புக் கொண்டாகவேண்டும்.

எனவே, சம்பந்தப்பட்டோரின் மனத் தாங்கல்கள், குறைகள் புரிந்துகொள்ளப்படாவிட்டால், நல்லிணக்கமும் சகவாழ்வும் என்று கூறுவது வெறும் கேலிக்கூத்து அல்லது கபட நாடகம் என்கின்றார் விக்னேஸ்வரன்.

கிணற்றுக்குள் தள்ளி வீழ்த்தப்பட்டவனுக்கும், அவ னைக் கிணற்றுக்குள் தள்ளி வீழ்த்தியவனுக்கும் இடையில் நல்லிணக்கம் என்பது இலகுவில் சாத்தியமல்ல. அப்படியான நிலையில் அவர்களை வைத்துக்கொண்டு நல்லிணக்கம் என்று பேசுவது எல்லாம், கிணற்றுக்கு வெளியே சுதந்திரமாக நிற்கும் மனிதனின் ஆணையை கிணற்றுக்குள் சிக்கிக்கிடக்கும் மனிதன் மீது வல்வந்தமாகத் திணிக்கும் நாடகமாகவே இருக்கமுடியும். எனவே, முதலில் கிணற்றுக்குள் வீழ்ந்து கிடப்பவனை வெளியே சமதரைக்குக் கொண்டு வந்து, தன்னுடைய நிலையிலே ஸ்திரமாக இருக்க வாய்ப் பளிக்க வேண்டும். அதன் பின்னர்தான் அவன் சம அந்தஸ் தோடு சுயாதீனமாகத் தன் கருத்தைத் தொடர்பாடல் செய்ய முடியும். நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் உறுதிப் படுத்த அவன் நடவடிக்கை எடுக்க முடியும். - என்று நீதியரசர் விக்னேஸ்வரன் குறிப்பிடுகின்றமை இன்றைய நிலையில் கனகச்சிதமான உதாரணமாகும்.

ஆட்சியாளர்களுக்கும், பேரினவாதிகளுக்கும் இந்த உரையில் உள்ள நியாயம் புரியுமா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

# போக்குவரத்து விதிமுறைகளைக் கண்காணிப்பதில் பொலிஸாருடன் இணைந்து மாணவர்களும் ஈடுபடுவர்

## இதற்கென அவர்களுக்குப் போக்குவரத்துக் காப்பாளர் பதவி

யாழ்ப்பாணம், செப்.23

போக்குவரத்து விதி முறைகளை பொலிஸாருடன் இணைந்து கண்காணிப்பதற்காக யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு விசேட பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது. இதன் பின்னர் இவர்கள் போக்குவரத்துக் காப்பாளர்களாக நியமிக்கப்படுவர்.

இத்தகவலை யாழ்.மாவட்ட போக்குவரத்துப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெனக சேனதீர உதயனுக்குத் தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இப்பொழுது யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்நிலையில் வீதிப் போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் ஏ - 9 பாதை முற்றுமுழுதாக மக்கள் பாவனைக்கென கையளிக்கப்பட்டால் தென்னிலங்கையில் இருந்து பெருந்தொகையானவர்கள் சுற்றுலா, வியாபாரம் என்று பல்வேறு தேவைகளுக்காக இங்கு வருகைதரவுள்ளனர்.

இவ்வாறான சூழலில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு அதனால் விபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. இத்தகைய நிலையினைக் கருத்திற் கொண்டும் எமது போக்குவரத்துப் பிரிவில் ஏற்பட்டுள்ள ஆளணிப் பற்றாக்குறையினையும் கருத்திற்கொண்டும் பாடசாலை மாணவர்களுக்குப் போக்குவரத்துத் தொடர்பான விதிமுறைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கி அவர்களை 'போக்குவரத்துக் காப்பாளர்' என்று தரநிலைப்படுத்தி போக்குவரத்துப் பொலிஸாருடன் இணைந்து அவர்களும் சேவையாற்றவுள்ளனர்.

போக்குவரத்துப் பொலிஸ் சேவையின் 162 ஆம், 240 ஆம் பிரிவின் கீழ் உள்ள அதிகாரம் யாவும் இந்தப் போக்குவரத்துக் காப்பாளர்களுக்கு வழங்கப்படும். முதற்கட்டமாக யாழ்.மத்திய கல்லூரியில் தெரிவுசெய்யப்பட்ட 30 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கி வருகின்றோம்.

தொடர்ந்து ஏனைய பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கும் இத்தகைய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சி நிறைவில் அவர்களுக்கு போக்குவரத்துப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகரின் கையொப்பம் இடப்பட்ட சான்றிதழ்களும் அவர்கள் கடமையின் போது அணிவதற்காக 'போக்குவரத்துக் காப்பாளர்' என்று பொறிக்கப்பட்ட சீருடையும் வழங்கப்படும் - என்றார் அவர்.

# யாழ். மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் பாட வேளைகளில் கைத்தொலைபேசி பாவிக்கத் தடை

## மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.23

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பாட வேளைகளில் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி செல்வரத்தினம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இது தொடர்பான சுற்றுநிருபத்தினை அனுப்பிவைத்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தவை வருமாறு:

ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு கையடக்கத் தொலைபேசிகளைக் கொண்டு வருவதாகவும், தமது பாட வேளைகளில் அதனை நீண்ட நேரம் பாவிப்பதனால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தடைப்படுவதாகவும் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இத்தகைய அசௌகரியங்களை தவிர்க்கும் பொருட்டு ஆசிரியர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பாட வேளைகளில் பாவிப்பது என்பது முற்றாகத்தடைசெய்யப்படவேண்டும் என்ற கல்வி அமைச்சு சுற்று நிருபத்தினை எமது மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்துள்ளது.

எனவே இவ்விடயம் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தமது வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமை புரியும் அதிபர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இது தொடர்பான முழுமையான விவரங்கள் அடங்கிய சுற்றுநிருபங்களை தத்தமது பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ளனர். வெகு விரைவில் இது நடை முறைக்கு வரவுள்ளதாகவும் இதற்கு சகல பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் தமது முழுமையான ஆதரவினை நல்க வேண்டும்.-என்றார் அவர். (50-9)

# இளவாலைக்கான இரவு நேர பஸ்ஸுக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் பயணிகள்

யாழ்ப்பாணம், செப்.23

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து இளவாலை நோக்கிச் செல்லும் 788 இலக்க இரவு நேர பஸ்சேவையின் நேர சீரின்மை காரணமாகப் பயணிகள் சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு 7.30 மணிக்குப் புறப்பட வேண்டிய இந்த பஸ் நேரம் பிந்திப் புறப்படுவதால் பயணிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

வவுனியாவில் இருந்து பயணிகளுடன் வரும் பஸ்கள் மத்திய பஸ் நிலையத்தை வந்தடைந்த பின்னரே இளவாலைக்கான 788 இலக்க பஸ் புறப்படுகின்றது. இரவு 8.30 மணிக் குப் பின்னரே இந்த பஸ் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து புறப்படுவதால் பயணிகள் சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

# முன்பள்ளிகளின் செயற்பாடுகள் குறித்து ஆராய உயர் மட்டக் குழு அடுத்தவாரம் யாழ்.வருகின்றது

யாழ்ப்பாணம், செப்.23

யாழ்.மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கு தென்னிலங்கையில் இருந்து உயர் மட்டக் குழு ஒன்று அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும் அவற்றின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாகவும் இந்தக் குழுவினர் ஆராய உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

10 நாள்கள் யாழ்ப்பாணத்தில் தங்கவுள்ள இந்தக் குழுவினர் யாழ்.மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களுக்குட்பட்ட முன்பள்ளிகளின் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், முன்பள்ளிகளின் இணைப்பாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் என்று பல்வேறு தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது முன்பள்ளிகளின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும், முன்பள்ளிகளில் கடமை புரிகின்ற ஆசிரியர்களின் வேதன உயர்வு தொடர்பாகவும் ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகள் முன்வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (50-9)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 08 | 24.09.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | மு.இ. 10.24 வரை |
| நட்சத்திரம்: | அனுஷம் |
| | பி.ப.5.16 வரை |
| [illegible] | 07.32 - 09.02 |
| [illegible] | 1.32 - 3.02 வரை |

# யாழ்.போதனா வைத்தியசாலை பிரசவ விடுதியில் அசௌகரியங்களை எதிர்கொள்ளும் நோயாளர்கள்

யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரசவ விடுதியில் சுகாதாரச் சீர்கேடுகள் பெருமளவில் நிலவுவதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக அங்குள்ள மலசல கூடங்கள் சரிவரப் பராமரிக்கப்படுவதில்லையென நோயாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சில நேரங்களில் மூன்று, நான்கு நாள்கள் தொடச்சியாக மலசல கூடங்கள் சுத்தம் செய்யப்படாமல் இருப்பதாகவும் இதனால் பிரசவ வேதனையில் அவதிப்படும் நோயாளிகள் மலசலம் கழிப்பதற்கு உரிய இடமில்லாமல் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை பிரசவ விடுதியில் காலையில் மலசல கூடம் சுத்திகரிக்கப்படாமல் இருப்பதைக் கண்டு நோயாளி ஒருவர் செய்த முறைப்பாடொன்று உதாசீனப்படுத்தப்பட்டதோடு, தொடர்ச்சியாக நான்கு நாள்கள் மலசல கூடம் கழுவப்படாமல் விடப்பட்டதாகவும் தூர உள்ள விடுதிக்குச் சென்று மலசலம் கழிக்குமாறு தாதி ஒருவரால் அவர் பணிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதனால் வேறொரு விடுதிக்குச் சென்று மலசலம் கழிக்க முற்பட்ட போது அந்த விடுதித் தாதியால் அந்நோயாளி கண்டபடி ஏசப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான சம்பவங்களால் பல நாள்கள் விடுதியில் தங்கிநின்று சிகிச்சை பெறுகின்ற நோயாளிகள் பலரும் சொல்லொணாத் துயரத்தை எதிர்நோக்குவதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் பிரசவத் தாய்மாரின் அழுக்குத் துணிகள் போடுவதற்குகூட இடமில்லாமல் அசுத்த நிலை காணப்படுவதாகவும் உணவுக் கழிவுப் பொதிகள் போடுவதற்கு இடம் ஒதுக்கித்தராமையால் கண்ட கண்ட இடங்களில் கழிவுகள் போடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பிரசவ வேதனையில் அவதிப்படும் நோயாளிகளை அங்கு கடமையில் உள்ளவர்கள் கண்டபடி ஏசுவதாகவும் இதன் காரணமாக நோயாளிகள் பயந்து நடுங்கியபடியே சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதோடு கடுன்மயான மன உளைச்சலுக்கு ஆளாவதாகவும் கூறப்படுகிறது. இதை உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் கூட அவர்களும் உரிய நடவடிக்கை எடுக்காமல் அதை கடிதம் மூலம் தெரிவிக்குமாறு கூறுவதால் தாங்கள் எங்கே பழிவாங்கப்படுவோமோ எனப்பயந்து தமதுதலைவிதியென எண்ணி நொந்தவாறு சிகிச்சை முடியும்வரை அசௌகரியங்களை நோயாளிகள் பொறுத்துக்கொள்வதாகவும் கூறப்படுகிறது. (4-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கல்வி வளர்ச்சியிலும் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற முது மொழியின் வழியிலும் தன்னை அர்ப்பணித்து மக்களது நோய் பிணி, துன்பம், துயரம் ஆகியவற்றினை நீக்குவதில் நிறைவுகாணும் யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் அதிபர்

**திரு.க.க.யோகநாதன்**

அவர்கள் சித்த ஆயுள் வேத வைத்தியராக R.A.M.P பட்டம் பெற்றமையைக் கண்டு "நிதியம்" பெருமையடைகிறது, பெருமிதம் கொள்கிறது.

அவரது புனிதமான சேவை மக்களுக்குக் கிட்ட அவர் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமெனவும், அவர் பணி மேலும் மேலோங்க வேண்டும் எனவும், அருள் மிகு தும்பளை கணக்கிலாவத்தைச் சித்திவிநாயகர் அருளையும், தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மனின் கருணையையும் வேண்டி இதய சுத்தியோடு பிரார்த்தனை செய்கின்றோம்.

"சாந்தி"
நெல்லண்டை, பருத்தித்துறை.

மணியம் கணபதிப்பிள்ளை
ஞாபகார்த்த நிதியம்.

(சி/560983)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடமை, கண்ணியம், கட்டுப்பாடு,
உண்மை, நேர்மை, பயமின்மை, அமைதி,
பொறுமை, சாந்தம் ஆகிய ஒன்பது
இலட்சணங்களுக்கும் இலக்கணமாய்
விளங்கும் யா/ தும்பளை சிவப்பிரகாச
மகா வித்தியாலயத்தின் அதிபர்

**திரு.க.க.யோகநாதன்**

அவர்கள் ஒரு பதிவு செய்யப்பட்ட சித்த ஆயுள்வேத வைத்தியராக R.A.M.P பட்டம் பெற்றமையை எமது சங்கம் பாராட்டி வாழ்த்துகின்றது.
கல்வி வளர்ச்சியிலும் மருத்துவத்துறையிலும் அவர் பணி மேலோங்க நீடூழி வாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

(சி/560984)

## முதியோரைக் கௌரவித்தல்



வாழ்த்துகிறோம், வணங்குகிறோம்
கௌரவிக்கின்றோம்
எமது கழகத்தின் ஆரம்பகால உறுப்பினர்
லயன்ஸ் சீமாட்டி கலாதேவி பொன்னம்பலம்
அவர்களின் தந்தை
இளைப்பாறிய ஆசிரியர்
தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி


**திரு.தி.சுந்தரமூர்த்தி**

அவர்களின் 100 ஆவது அகவையை முன்னிட்டு வாழ்த்தி அவர் மேலும் நீடூழி வாழ வாழ்த்துகிறோம். இந்த விழாவில் சகல அரிமாக்கழக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர், சக அங்கத்தவர்கள்
லயன்ஸ் கழகம், மல்லாகம், தெல்லிப்பழை.

(89152)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவன்
யோ.இதயகாந்தன்
அவர்களின் பாசமிகு
தந்தையான

**பொன்னுத்துரை யோகேஸ்வரராஜா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மட்டக்குளி.* (89095)
HNDE
மாணவர்கள்.

## மக்கள் பணி தொடர வாழ்த்துக்கள்



சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின்,
யாழ்.மாவட்ட இணைப்பதிகாரியும் ஈழமக்கள் ஜனநாயகக்
கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளருமாகிய
உயர் திரு சில்வேஸ்திரி அலன்டின் யூட் (உதயன்)
அவர்கள் அண்மையில் அகில இலங்கை சமாதான
நீதிவானாகப் பதவி ஏற்றுக் கொண்டதையிட்டு பெரும்
மகிழ்ச்சி அடைகின்றோம்.



சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை
அமைச்சர் மாண்புமிகு கௌரவ
கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின்
வழிகாட்டலில் பனம் தொழில் வல்லுனர்களின் சமூக
பொருளாதார மேம்பாட்டிற்கும் பணிகள் பல செய்து
பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

(சி/560985)

## மோ. சைக்கிளிலிருந்து தவறிவீழ்ந்து பெண் காயம்

யாழ்ப்பாணம், செப். 23

மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்து குடும்பப் பெண் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் மீசாலையில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எம். கமலா தேவி (வயது 53) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தி சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதி வளைவில் மோட்டார் சைக்கிள் திரும்பிய வேளையில் இப் பெண் தவறிவீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## ஆணைக்குழு யாழ். அலுவலக இணைப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம், செப். 23

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்கு பிராந்திய இணைப்பாளராக தங்கவேல் கனகராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக இணைப்பாளர் இன்றி யாழ். அலுவலகம் இயங்கி வந்தது தெரிந்ததே.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை அலுவலகத்தில் உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான நிரந்தர தீர்வுக்கான செயற்திட்ட அதிகாரியாக கனகராஜ் இதுவரை பணியாற்றி வந்தார். (1-25)

## தென்மராட்சி செயலகத்தில் இன்று கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், செப். 23

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இன்று கணனி மூலம் இலவச கண் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

கொழும்பிலுள்ள மூக்குக் கண்ணாடி நிறுவனத்தினரால் கண் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

கண் பார்வையில் குறைபாடு காணப்படும் பிரதேச மக்களை கண்பரிசோதனை முகாமில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)


### LCD T.V விற்பனைக்கு

42" அளவுடைய LCD - LG - TV விற்பனைக்கு (Flatmodel) உண்டு.
தொடர்புகொள்க 0777570247

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான புறொயிலர், மற்றும் பேட்டுக் குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம்.
பதிவுகளுக்கு சிற்றிபாம் ரேடர்ஸ் (கோல்ட் கொயின் கோழித்தீவன விநியோக நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற முகவர்) ஆடியபாத வீதி, கல்வியங்காடு. 0212221158 வியாபாரிகளுக்கு விசேட விலை க்கழிவு உண்டு.


## மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 23

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 16 மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு இன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

வலய விசேட கல்வி அலகினரால் மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

வலயக் கல்வி அலுவலகத்தினரால் மாணவர்களிடையே நடத்தப்பட்ட கண் பரிசோதனையின் போது பார்வையில் குறைபாடு காணப்பட்ட 72 மாணவர்களில் அவசியம் எனக் கருதப்பட்ட 16 மாணவர்களுக்கே மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

மாகாணக் கல்வி அமைச்சினால் இத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதி உதவியில் மூக்குக் கண்ணாடிகள் கொள்வனவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (1-207)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சிவசம்பு செந்தில்நாதன்**



(முகாமையாளர், இலங்கை வங்கி)

எமது ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா உபயகாரரும், இடப்பெயர்வு காரணமாக ஆலயம் செயலிழந்திருந்த வேளையில் எனது தந்தையாருடன் இணைந்து ஆலய வளர்ச்சியில் பெரும் தொண்டாற்றியவருமான சிவசம்பு செந்தில்நாதன் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தவளக்கிரி முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம், அளவெட்டி வடக்கு.

சிவஸ்ரீ பசுபதிநாதஐயர் மகேசன் ஐயா
(ஆலய உரித்துடைய பூசகர்)

(89093)

## கண்ணீர் அஞ்சலி



**சிவசம்பு செந்தில்நாதன்**

(முகாமையாளர், இலங்கை வங்கி,
உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்,
யாழ்ப்பாணம்)

சரிந்ததே வங்கியின் கலங்கரை விளக்கு
மென்மையான போக்கு மேன்மையான சுபாவம்
உண்மை நேர்மை சேர் உத்தமராம்
எங்கள் செந்தில் ஐயா சென்ற தெங்கேயென்று
வங்கிச் சமூகமே வலுவிழந்து விம்மி நிற்க
பொங்கி வரும் விழி நீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்,
இலங்கை வங்கி, சாவகச்சேரிக் கிளை.

(சி/560990)

## கண்ணீர் அஞ்சலி

**சிவசம்பு செந்தில்நாதன்**

(முகாமையாளர், இலங்கை வங்கி
உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகம்)



இலங்கை வங்கியின்
வளர்ச்சிக்காய் அயராது
உழைத்த அர்ப்பணிப்பாளன்
கடமை தவறாத
செயல் வீரன்
அகவை அறுபதில்,
வங்கி வாழ்வையும்,
வையக வாழ்வையும்
ஒன்றாக நிறைவு செய்த
செம்மலின் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திப்பதோடு
அன்னாரின்
குடும்பத்தினருக்கும்
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்
கொள்கின்றோம்.

இலங்கை வங்கி,
சுன்னாகம்
மேற்தரக்கிளை. (560982)

முகாமையாளரும்
ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

**சிவசம்பு செந்தில்நாதன்**

(முகாமையாளர், இலங்கை வங்கி.
உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயம்)



வீற்றிருந்தாய்
வீதிதனில் இருந்தாய்
நேற்றிருந்தாய் இன்று
எங்கே போனாய்?
கூற்றுவன் உன்னை
கொண்டா சென்றான்?
இல்லை இல்லை
இவ்வுலகில்
காற்றுள்ளவரை
எம்மனதில்
வீற்றிருப்பாய்
செந்தில்ஐயா என்ற
நல்ல நாமத்தில்

உதவிப்பொது முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கை வங்கி - வடபிராந்தியக் காரியாலயம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

**சதாசிவம் சிவநாதன் (சிவம்)**

(முன்னாள் உரிமையாளர், கணேசன் ஸ்ரோர்ஸ், ஊர்காவற்றுறை)



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சரவணை மேற்கில் வசித்தவரும் தற்போது 192/1, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவநாதன் (சிவம்) நேற்று (22.09.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசலிங்கம்
*சரவணை, நாரந்தனை*
*ஊர்காவற்றுறை. 021 222 9388*

தகவல்: சுதாகரன் யாழினி
(மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சிறிய கூட்டுறவு நகர் திறப்பு விழாவின் போது எடுக்கப் பட்ட படங்கள் இவை. சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாவை வெட்டிக் கூட்டுறவு நகரைத் திறந்துவைப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்ட கூட்டுறவாளர்களையும் படங்களில் காணலாம். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கமும் காணப்படுகிறார்.

# எமது பாரம்பரியம், வரலாறு போன்றவற்றை அறிவதிலும் பேணுவதிலும் நாம் பின்தங்கிவிட்டோம்

## பேராசிரியர் சிவச்சந்திரன் உரை



வண்ணை, செப்.23

எமது பாரம்பரியம், வரலாறு போன்றவற்றை அறிதலிலும், பேணுதலிலும் நாம் பின் தங்கிவிட்டோம் என்றே கருத வேண்டியுள்ளது.

இவ்வாறு கூறினார் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கலைமாமணி கிறகரி கிறிஸ்தோப்பர் அண்ணாவியாரின் 60ஆவது மணி விழாவில் கலந்து ''வியூகம்'' மணிவிழா மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

குருநகர், நாட்டுக்கூத்து மன்றத்தின் ஏற்பாட்டில் மன்றத் தலைவர் சி. தார்சீசியஸ் தலைமையில் மணிவிழா நடைபெற்றது.

இவ் விழாவில் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு.

எமது பாரம்பரியக் கலை வடிவங்களாக நடனம், நாடகம் ஆகியவற்றைக் கூறலாம். அதற்கும் மூத்த கலைவடிவம் நாட்டுக்கூத்தாகும்.

அவற்றிலும் வடமோடி, தென்மோடி என இரு வகையிலான கூத்துகள் நம் முன்னோரிடையே வழக்கில் இருந்தன.

இந்தக் கூத்து வகைகள் இந்திய தமிழ் மாநிலத்தில் இருந்து, கொண்டு வரப்பட்டதெனக் கூறினாலும் வடமோடி, தென்மோடி ஆகிய நாட்டுக்கூத்து வடிவங்கள் ஈழத்துக்கு உரியதான கூத்துகளே என்றார்.

மணிவிழா மலர் 'வியூகம்' நயவுரை ஆற்றிய கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ்:-

அண்ணாவி கிறகரி கிறிஸ்தோப்பர் சகல பணிகளையும் எவ்விதம் 'வியூகம்' அமைத்துச் செயற்பட்டுள்ளார் என்பதை இந்த மலர் எடுத்தியம்பியுள்ளது-என்றார்.

யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம்,பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மெயில், செல்வி நிக்கலின் சாமிநாதர் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினர். (50- 160)

# முதியோர் தினத்தையொட்டி விளையாட்டுப்போட்டி

சண்டிலிப்பாய், செப்.23

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச முதியோர் சங்கங்களின் விளையாட்டுப் போட்டியும், கலை நிகழ்ச்சியும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறவிருக்கின்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற முதியோர் சங்கங்களின் கூட்டத்தில் இது பற்றி முடிவு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வருடா வருடம் நடைபெறுவது போல் இவ்வருடமும் முதியோர்களுக்கிடையில் சைக்கிள் ஓட்டம், வேகநடை, சங்கீதக் கதிரை, பணிஸ் உண்ணுதல் உட்பட பல போட்டிகளும் இடம்பெறவுள்ளன. மாலை நிகழ்ச்சியாக முதியோர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (50- 115)

# தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைகளை வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.23

வடமாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றி வேறு மாகாணங்களில் தற்காலிக இணைப்பினைப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய ஆசிரியர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகங்களைக் கோரியுள்ளார்.

வடமாகாணத்திலிருந்து வேறு மாகாணங்களில் கடமை புரியும், தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் முறைப்படி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளோர் ஆகியோரின் விவரங்களும் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (04-38)

# நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டோருக்கான செப்ரெம்பர் மாத நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.23

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து வருகை தந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுப் பின்னர் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உலக உணவுத் திட்டத்தின் கீழான செப்ரெம்பர் மாதத்திற்குரிய நிவாரணப்பொருள்கள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணத்திற்கான வழங்கற் கட்டளைகளை செயலகத்தில் பெற்று நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்குமாறு யாழ். செயலகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்துள்ளது.

இந்த நிவாரணத்தில் அங்கத்தவர்கள் ரீதியாக விநியோகிக்கப்படும் பொருள்களின் விவரம் வருமாறு:

| செப்ரெம்பர் 2009 | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் | அங்கத்தவர் எண்ணிக்கை | | | | | | | | |
| | 1 அங் | 2 அங் | 3 அங் | 4 அங் | 5 அங் | 6 அங் | 7 அங் | 8 அங் | 9 அங் |
| அரிசி | 6.000 | 12.000 | 18.000 | 24.000 | 30.000 | 36.000 | 42.000 | 48.000 | 54.000 |
| மா | 6.000 | 12.000 | 18.000 | 24.000 | 30.000 | 36.000 | 42.000 | 48.000 | 54.000 |
| பருப்பு | 1.800 | 3.600 | 5.400 | 7.200 | 9.000 | 10.800 | 12.600 | 14.400 | 16.200 |
| சீனி | 0.600 | 1.200 | 1.800 | 2.400 | 3.000 | 3.600 | 4.200 | 4.800 | 5.400 |
| மரக்கறி எண்ணெய் (லீ) | 0.648 | 1.296 | 1.944 | 2.592 | 3.240 | 3.888 | 4.536 | 5.184 | 5.832 |

# கட்டுடை குடிதண்ணீர்த் திட்டம் முழுமை பெற்று மக்கள் நன்மை அடைவது அவசியமானது

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.23

கட்டுடையில் உள்ள குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை எந்தத் திணைக்களம் பொறுப்பேற்பது என்பதை விடவும் குடிதண்ணீர் சேவை முழுமை பெற்று மக்கள் நன்மை அடையவேண்டும் என்பதே முக்கியமானது.

இவ்வாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ம.ஜெகூ தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலர் ம.ஜெகூ தலைமையில், அண்மையில் இடம்பெற்றபோது, பொக்கணையூடாக கட்டுடைக்கு வரும் குடிதண்ணீர்த் திட்டத்தை விஸ்தரித்து நூறு வருடங்களுக்கு மேல் குடிதண்ணீர் இல்லாது கஷ்டப்படும், நவாலி வடக்கு மக்களுக்கு நன்னீர் வழங்குவதற்கு பிரதேச சபை. குடிதண்ணீர்த் திட்டத்தை நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையிடம் வழங்கி உதவ முன்வரவேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன் போதே சண்டிலிப்பாய் பிரதேச சபையும்- நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் ஒருங்கே கருத்தொருமித்து விரைவில் ஒரு முடிவுக்கு வந்து மக்கள் குடிதண்ணீர் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்கத் திட்டத்தைப் புனரமைப்பதற்கான பணியை சண்டிலிப்பாய் பிரதேச சபை முன்னெடுத்துள்ளது.

மாரிகாலத்திற்கு முன்னர் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கலாசார மண்டபம் புனரமைப்புப் பணி இடை நடுவில் தடைப்பட்டுள்ளது. பிரதேச சபை இதற்கான நடவடிக்கையை தொடர முன்வரவேண்டும்.

பொது அமைப்புக்களும் அதற்கான கடிதத் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை நவாலி வடக்கு - நவாலி தெற்கு ஆகிய இரு கிராமங்களும் பிரதேச வளர்ச்சியில் பின் தங்கியுள்ளதாகவும்

இக்கிராமங்களை மீள் எழுச்சித் திட்டத்தில் சேர்ந்து அபிவிருத்தி செய்யுமாறும் கோரும் கடிதம் ஒன்று கிராம அலுவலர் ஊடாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம் உட்பட 23க்கும் மேற்பட்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர். (04-302)




# புத்தூர் - வல்வை வீதியை அகலமாக்கி புனரமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.23

பருத்தித்துறை பிரதான வீதியில் புத்தூரில் இருந்து வல்வை வரையான வீதியை அகலமாக்கிப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ் வீதியை அகலமாக்கி புனரமைப்பதற்கென சுமார் 126 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இவ் வீதிப் புனரமைப்புப் பணிகளை நிறைவேற்றி முடிக்க [illegible] வீதி புனரமைப்பு ஒப்பந்தகாரர்களிடம் அதிகாரசபை கேட்டுள்ளது. (50-224)

# கூட்டுறவுத் துறைசார்ந்த பிரச்சினைகள் படிப்படியாகத் தீர்த்து வைக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப்.23

முன்னாள் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அமைச்சர் என்றரீதியில் கூட்டுறவுத்துறை சார்ந்து நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக நன்கறிந்துள்ளேன். உடனடியாக இல்லாவிட்டாலும் படிப்படி யாக யாழ் .மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதிக கவனம் செலுத்தி வருகின்றேன் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை மற்றும் அராலிப் பகுதிகளில் இரு சிறப்பு சிறிய கூட்டுறவு நகரங்களைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பல வருடங்களாகப் பாதிக்கப்பட்டுள்ள எமது கூட்டுறவுத்துறை சார்ந்த நிறுவனங்களை உரிய முறையில் மீளக் கட்டியெழுப்புவதே எனது நோக்கம். நான் மேற்கொண்டு வருகின்ற மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுக்கும் போது ஏனைய துறைகளுடன் கூட்டுறவுத் துறையும் பாரிய வளர்ச்சி காணும் என்பதில் உறுதியான நம்பிக்கை எனக்கு உள்ளது -என்றார். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி கமலா காசிநாதன் அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் வல்லிபுரம் பரமலிங்கம்**

இறைபதம் அடைந்ததையிட்டு அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

(89092)

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தீர்த்தத் திருவிழாவிற்கு பக்தர்கள் அனைவரும் கடலுக்குச் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், செப்.23

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவின்போது தீர்த்தத் திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் முன்னரைப்போலன்றி பக்தர்கள் அனைவரும் கடலுக்குச் சென்று தீர்த்தமாடிவர நண்பகல் 12 மணியள வில் இருந்து மாலை 7 மணிவரை படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதற்கான அனுமதியை ஆலய அறங் காவலர் சபையினர் பெற்றுள்ளனர் என சபைச் செயலாளர் எஸ்.கேசவானந்தம் அறிவித்துள்ளார்.

ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் இந்த ஆலயத்தின் தீர்த்தத் திருவிழாவின் போது சமுத்திரத் தீர்த்தமாட குறிப்பிட்ட எண்ணிக்கையான பக்தர்களுக்கு மட்டுமே படையினர் அனுமதி வழங்கியதாகவும் இந்த வருடத்தில் இருந்து அனைத்துப் பக்தர்களும் செல்ல அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-207)

## சுன்னாகத்தில் சைக்கிள் திருட்டு

சுன்னாகம், செப்.23

கடையின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் திருடப்பட்டுள்ளது. இச் சம்பவம் கடந்த வாரம் சுன்னாகத்தில் இடம் பெற்றது. பலசரக்குக் கடையின் ஊழியரது சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (1-38)


## தொழில் வாய்ப்பு

### நோயாளர் பராமரிப்பாளர் தேவை

**யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்.ஜோன் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆண், பெண் பராமரிப்பாளர்கள் தேவை.**

**சேவையில் ஈடுபடுவோர்க்கு நாள் ஒன்றிற்கு ரூபா 500 ஊக்குவிப்பாக வழங்கப்படும். இச் சேவையில் இணைய விரும்புவோர் 27.09.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள சென். ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் வரவும்.**

மேலதிக விவரங்களுக்கு:
தொ.பே.இல: 021 2223166

சென்.ஜோன் அம்புலன்ஸ்
யாழ்ப்பாணம்.

(89089)

அவசர அம்புலன்ஸ் தொடர்பு இல: 0213214444


## 31 ஆம் நாள் நினைவு ஆராதனை

மண்ணில்
01
★
08
★
1925



கர்த்தருக்குள்
24
★
08
★
2009

### திருமதி தங்கரத்தினம் இராஜசூரியர் (மம்மி)

**தங்கரத்தினம் ஒரு தங்கமானவர்**
**கலங்கா நெஞ்சுடன் இறையை விசுவாசித்தவர்**
**காலம் கனிந்ததென கர்த்தரை அடைக்கலம் கேட்டவர்**
**அமைதியை நாடி கர்த்தருக்குள் ஒன்றாய் கலந்தவர்.**

கனடாவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது தாயாரின் வாழ்விற்கும் ஜெப ஊழியத்துக்குமான நன்றி செலுத்தும் ஆராதனை நாளை (24.09.2009) வியாழக்கிழமை மு.ப.11 மணிக்கு அன்னாரது பண்டத்தரிப்பு இல்லத்தில் நடைபெறும். அந்த நிகழ்வில் கலந்து கொள்வதுடன், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு உறவுகளையும், நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

திருமதி சமாதானம் (பபா),
செல்வி சுசிலா (சுசி),
திரு. நீல் இராஜசூரியர்,
திரு. ஏனஸ்ற் இராஜசூரியர்,
திருமதி சாளெற் தர்மானந்தம்.

"எபநேசர் இல்லம்"
அரசடி வீதி, பண்டத்தரிப்பு.
தொ.பே.எண்:
0217900807

(89085)

## கணனிக் கற்கைநெறி

யாழ்ப்பாணம், செப். 23

'நியூ மைக்ரோ' கணனி நிலையம் நான்காம் ஆண்டில் கால்பதிப்பதை ஒட்டி இலவச கணனிக் கற்கை நெறிகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 30 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. இக் கற்கை நெறி தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 021 3210727, 0214596042 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கணனி நிலைய இயக்குநர் அறிவித்துள்ளார். (201)

## தவறிவிட்டது

தும்பளை வீதி, பருத்தித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் நந்தகுமார் என்பவரது விசேட அ.அ., சாரதி அனுமதிப்பத்திரம், H.N.B.வங்கியின் ATMகாட், கொமர்ஷல் வங்கியின் விசா காட் என்பன பேர்சுடன் கடந்த 19.09.2009 சனிக்கிழமை வவுனியா றமியா கவுஸில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து தவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே: 077 3146059, 021 226 3664

## 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16
★
07
★
1946



மறைவு
16
★
09
★
1985

### சின்னப்பு குணசிங்கம்

அன்பின் வடிவமாய் அறிவின் சுடராய்
தயாள குண உருவாய் தரணி போற்ற
வாழ்வு கண்டு
எங்களையும் நல்வாழ்வு காண வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
இறை நிழலில் இன்பமுத்தி நிலைபெற்று
அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

3 ஆம் கட்டை,
சிங்கராயர் வீதி, கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

(89088)

# மரண அறிவித்தல்

நயினாத்வைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பரமலிங்கம் 21.09.2009 அன்று காலமானார்.

அன்னார் அமரர்கள் வல்லிபுரம்-சின்னப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் அமரர்கள் கந்தையா-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வுபெற்ற தலைமை தாதிய உத்தியோகத்தர்), புஸ்பவதி (London) ஆகியோரின் அன்புக் கணவரும் திருமகள் (ஓய்வுபெற்ற தலைமை தாதிய உத்தியோகத்தர்), கலைமகள், வசந்தகுமார் (கிராம சேவையாளர், கொக்குவில் மேற்கு J/128), கமலா (ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ஞானமலர், கமலாதேவி (France), ஜெயந்திமாலா, கதிர் (France), அமரர் ஸ்ரீதரன், நித்தியதர்மகுமார்(London), வன்னியசேகரன் (Translator, Health Services, Vavuniya), Dr.சத்தியகுமார் (Consultant Orthodentist, Colombo), பிறேம்குமார் (France), கலையரசி, மதியழகி (France), அமரர் ஜெயக்குமார் (D.S.S.O, Vavuniya), கிருஷ்ணபவானி (London), உதயகுமார் (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் மகாதேவன் (தாதிய உத்தியோகத்தர்), தவவிநாயகம், இந்திராவதி, காசிநாதன் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி), சேரன், ஜெயா (France), சிவலிங்கம் (முன்னாள் முகாமையாளர், நல்லூர் M.P.C.S), வீரவாகு (France), லலிதா (France), வசந்தகௌரி (France), அமரர் தேவகி, Dr.நிருஷினி (Consultant Rodiologist, Colombo), சாந்தகுமாரி (France), சண்முகானந்தன் (ராஜா கிறீம் ஹவுஸ்), தக்ஷிநேசா (France), Dr.ரமணி (Medical officer, Vavuniya), சர்வேந்திரன் (London), சுபாஜினி (ஆசிரியை, சுதுமலை வடக்கு த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் நடராசாவின் அன்புச் சகோதரனும், முத்துலட்சுமி, புஸ்பராசா(France) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2009) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ப.வசந்தகுமார் (மகன்)
(கிராம சேவையாளர், கொக்குவில் மேற்கு)
சு.சிவலிங்கம் (மருமகன்)
Dr. ப.சத்தியகுமார் (மகன்)
(Consultant Orthodentist, Colombo)
T.P: 0779004442

ரயில் நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(89094)



**வல்லிபுரம் பரமலிங்கம்** (நயினாதீவு)
(முன்னாள் உப தலைவர் கொக்குவில் கிராம சபை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலயத்தால் நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடிவினாப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.23

வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மொழி மூலப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர் விவரம் வருமாறு:

*தரம் 6* :த.கேசிகா - உடுவில் மகளிர் கல்லூரி, யோ.கோபிகா - வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், ர.லோகிதா - ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

*தரம் 7*: ப.காண்டீபன் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி, த.சஜீபன் - யூனியன் கல்லூரி, பி.சசிகரன் - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

*தரம் 8*: ம.சங்கவி - வட்டு மத்திய கல்லூரி, க.சயந்தன் -விக்ரோறியாக் கல்லூரி, கு.அபிராமி - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

*தரம் 9*: பு.வைஷ்ணவன் - தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி., கே.கௌசிகன் - மகாஜனாக் கல்லூரி, ஜெ.அஜந்தன் - வயாவிளான் மத்திய மகா வித்தி.,

*தரம் 10* : த.கலைநீதன் - வயாவிளான் மத்திய மகா வித்தி., கே.சோபனா - அருணோதயக் கல்லூரி, எஸ்.தாட்சாயணி - இளவாலை கன்னியர்மடம் டிகா வித்தி.

*தரம் 11*: வே.நிந்துஜா - பண்டத்தரிப்பு பெண்கள் உ.த.பாடசாலை, அ.ஆன்அனோபிஜா - மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை, பு.சுகன்ஜா - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

ஆங்கில மொழிமூல வினாடிவினாப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர் விவரம் வருமாறு:

*தரம் 6*: ஐ.கஜராணி - மானிப்பாய் மகளிர் கல்லூரி, வை.ஐங்கரன் - விக்ரோறியாக் கல்லூரி, ரி.தேவமித்ரா - உடுவில் மகளிர் கல்லூரி.

*தரம் 7*: பி.மசாயினி - உடுவில் மகளிர் கல்லூரி, வி.விஜினா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, எஸ்.சிந்துஜா - யாழ்ப்பாணக் கல்லூரி.

*தரம் 8*: எஸ்.விருதிகா - உடுவில் மகளிர் கல்லூரி, கே.தனுசியா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, ரி.தாரணி - விக்ரோறியாக் கல்லூரி.

*தரம் 9*: ஜே.கிறேஸ் ஏஞ்சலின் - உடுவில் மகளிர் கல்லூரி, ரி.விஜிதா - விக்ரோறியாக் கல்லூரி, யூ.கீர்த்தனா - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

*தரம் 10*: பி.சதுர்வேதன் - யாழ்ப்பாணக் கல்லூரி,ஜே.யாழரசி - வட்டு. இந்துக்கல்லூரி, ஐ.கார்த்திகா - விக்ரோறியாக் கல்லூரி.

*தரம் 11*: எம்.கார்சன் - யாழ்ப்பாணக் கல்லூரி, கே.உஷாமினி - உடுவில் மகளிர் கல்லூரி, எம்.நாகசௌந்தரி - வட்டு.இந்துக் கல்லூரி. (203-38)



வலி. மேற்கு (சுழிபுரம்) பிரதேசசபைக்குட்பட்ட அராலியில் வீதி திறப்பு விழா பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

வடக்குமாகாண பொதுநிர்வாக செயலக பிரதிப் பிரதம செயலாளரும் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபருமான தி. இராசநாயகம் மங்கள விளக்கேற்றுகிறார்.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி , பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி ஆகியோர் அருகில் நிற்கிறார்கள். *(படம். இரா.சுதா)*

# அரிசிமாவில் தயாரிக்கப்பட்ட பாண் விரைவில் விற்பனைக்கு வரவிருக்கிறது

கொழும்பு, செப். 23

அரிசி மாவில் தயாரிக்கப்பட்ட பாண் மிக விரைவில் விற்பனைக்கு வரவிருக்கின்றது.

மாபிமா நிறுவனத்தின் தலைவர் ஆரிய சீல விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

உள்ளூரில் உற்பத்தியாகும் அரிசியைக் கொண்டு பாண் தயாரிக்கும் தொழில்நுட்பம் குறித்துப் பயிற்சி அளிப்பதற்காக யப்பான் நிறுவனம் ஒன்றின் நிபுணர் குழு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்பு வர விருக்கின்றது.

கோதுமை மா இறக்குமதியால் வீணாகிப் போகும் வெளிநாட்டு நாணயச் செலாவணியை மீதப்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

கோதுமை மா இறக்குமதிக்காக வருடாந்தம் 20 ஆயிரம் பில்லியன் ரூபாவை வெளிநாட்டுச் செலாவணியாக அரசு செலவிட்டு வருகின்றது.

கோதுமை மாவுக்கு பதிலாக அரிசி மா மூலம் பாணை உற்பத்தி செய்தால் இந்த வீணான செலவு தவிர்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (1)

# மிகவும் வேதனையான கால கட்டத்தில் வாழ்வதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத்சில்வா கவலை

கண்டி,செப்.23

மிகவும் வேதனையான ஓர் கால கட்டத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம் என முன்னாள் பிர தம நீதியரசர் சரத் என் சில்வா கவலை தெரிவித்துள்ளார்.

கண்டியில் தனியார் பாடசாலையொன்றின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தின் பல சரத்துக்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டில் சட்டம், ஒழுங்கு என்பன உடைத்தெறியப்பட்டுள்ளன என்றும், இது மிகவும் ஓர் வேதனையான நிலைமை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''அரசியல் சாசனத்தின் அனைத்து சரத்துக்களையும் நேர்மையுடன் பாதுகாக்க வேண்டியது நாட்டின் சகலரதும் தலையாய கடமை.

ஒவ்வொரு அதிகாரியும், கிராம உத்தியோகத்தர், பொலிஸ் உத்தியோகத் தர் முதல் ஜனாதிபதி வரையில் அனைவரும் அரசியல் சாசனத்திற்கு கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.



நாட்டின் அரசியல் சாசனத்தை முழுமையாகப் பாதுகாப்பதாகக் கூறியே பிரதம நீதியரசரிடம் ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

எவ்வாறாயினும், இதில் எத்தனை சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன, எத்தனை சட்டங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே.

நல்ல குடிமக்கள் நாட்டின் அரசியல் சாசனத்திற்கு கட்டுப்பட்டு செயற்படுவார்கள் - என்றார். (சி)

# சர்வதேச சக்திகள் நாட்டுக்கு எதிராக சதி என அமைச்சர் பந்துல சீற்றம்!

''இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய முன்னேற்றம் அடைந்துவருவதை தாங்கிக் கொள்ள முடியாத சில சர்வதேச சக்திகள் நாட்டுக்கு எதிராக சதித்திட்டங்களை மேற்கொண்டுள்ளன. அந்த சக்திகளின் உள்நாட்டு முகவர்களாக பலர் இலங்கையிலும் செயற்படுகின்றனர்''

- இவ்வாறு வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகை கிடைத்தால் வரவேற்போம். ஆனால் கிடைக்காவிடின் நாம் அது குறித்து கவலையடைய வேண்டியதில்லை. சவால்களுக்கு முகம்கொடுத்து பொருளாதாரத் தடைக்கற்களைக் கடந்து செல்லவேண்டும்.

நாட்டின் பிரதான அரச வங்கிகள் வட்டி வீதங்களை இரண்டு வீதத்தினால் குறைத்துள்ளன. இது நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்புக்கு சிறந்த முறையில் வலுச் சேர்க்கும் விடயமாகும். இதன்மூலம் மக்கள் குறைந்த வட்டி வீதங்களில் கடன்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செலவுகள் குறைவடையும்.

பணவீக்கமும் வட்டி வீதங்களும் குறைந்து காணப்படுவது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்படும் பண்புகளில் ஒன்றாகும். இந்நிலையில் இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகும். எனவே வட்டி வீதம் குறைவடைகின்றமை மற்றும் பணவீக்கம் வீழ்ச்சி கண்டுள்ளமை என்பன ஆரோக்கியமான நிலைமையாகும் - என்றும் அவர் குறிப்பிட்டார். (03)

## வரலாற்றில் முதல் தடவையாக

# ஆயிரத்து 72 கடற்படையினர் பயிற்சி முடித்து வெளியேற்றம்

கொழும்பு,செப்.23

இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக ஒரே முறையில் 1,072 கடற்படையினர் தமக்கான பயிற்சியை முடித்துக் கொண்டு கடந்த ஞாயிறன்று வெளியேறியுள்ளனர் என கடற்படைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள பூனாவை கடற்படைத்தளத்தில் இடம்பெற்ற இதற்கான வைபவத்தில் முக்கிய விருந்தினராக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசர சமரசிங்க கலந்துகொண்டார்.

பல்வேறு பயிற்சித் தளங்களிலும் 25 வாரப் பயிற்சியை முடித்துக்கொண்டு இவர்கள் வெளியேறியுள்ளனர். 2009ஆம் ஆண்டு வெவ்வேறு சம்பவங்களின்போது திரட்டப்பட்டவர்களுக்கே இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

புதிய கடற்படையினர் பயிற்சி முடித்து வெளியேறிய இந்த வைபவத்தில் மதத் தலைவர்கள், கடற்படையின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பணிப்பாளர் நாயகம் தரத்திலான அதிகாரிகள், கடற்படையின் உயரதிகாரிகள், இராணுவ, பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தவர்களின் குடும்பத்தினர் என பலதரப்பட்டவர்களும் கலந்து கொண்டார்கள். (அ-சி)

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கவேண்டும்

## கொழும்பு மறை மாவட்ட ஆயர் வேண்டுகோள்

கொழும்பு, செப். 23

ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்கவேண்டும் என்று கொழும்பு மறை மாவட்ட ஆயர் வண. டாக்டர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கைக்கு தொடர்ந்து வழங்குவதன் மூலம் இலங்கையில் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவிசெய்ய முடியும்.

இந்த விடயம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் சாதகமாகப் பரிசீலிக்கவேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-சி)

# தென் மாகாணத் தேர்தல் வன்முறை: இருபது பேர் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, செப்.23

தென்மாகாணத் தேர்தல் பிரசாரங்களின் போது சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள சுமார் 20 பேருக்கு எதிராகப் பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண இதனைத் தெரிவித்தார்.

தென்மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களின்போது வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராகக்கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

இதேவேளை, தென்மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இன்று முதல் தபால் நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பொருட்டு இந்த வாக்காளர் அட்டைகள் நேற்று தேர்தல்கள் செயலகத்தினால் தபால் நிலையங்களுக்குக் கையளிக்கப்பட்டன என்றும் அறியமுடிகிறது.

இதற்கிடையில் மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களின் தோட்டப் பகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கு விசேட பணியாளர்களைத் தபால் திணைக்களம் நியமித்திருக்கிறது என பிரதித் தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார். (அ-சி)

# இலங்கைத் தமிழ் அகதிகள் 50 பேர் செங்கல்பட்டு முகாமில் உண்ணாவிரதம்

சென்னை, செப்.23

தமிழகத்தின் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இலங்கை அகதிகள் 50 பேர் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கினர்.

செங்கல்பட்டில் உள்ள சிறப்பு முகாமில் 70 பேர் தங்க வைக்கப்பட்டனர். இவர்களில் பலர் மீது பொலிஸார் எந்த வழக்கையும் பதிவு செய்யாமலும், சிலர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை தொடர்ந்து நடத்தாமலும் பொலிஸார் அலைக்கழித்து வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

பொலிஸாரின் இந்தப் போக்கைக் கண்டித்து முகாமில் உள்ள அகதிகள் அனைவரும் கடந்த ஜூலையில் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர்.

இதனையடுத்து இவர்களிடம் மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் பேச்சு நடத்தினர். அதில் வழக்குப் பதிவு செய்யப்படாமல் இருக்கும் 12 பேர் உடனடியாக விடுவிக்கப்படுவர் என உறுதியளித்தனர்.

மற்றவர்கள் மீதான வழக்குகள் அடுத்த ஒரு மாதத்தில் விரைந்து முடிக்கப்படும் எனவும் உறுதியளித்தனர். இதன் காரணமாக சிறப்பு முகாம் அகதிகள் தங்களது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டனர்.

இதன்படி வழக்கு பதிவாகாமல் இருந்த 12 பேர் விடுவிக்கப்பட்டனர். ஆனால், வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நபர்கள் விடயத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

பொலிஸார் கேட்டிருந்த கால அவகாசம் முடிந்துவிட்டதை அடுத்து சிறப்பு முகாம் அகதிகள் 50 பேர் மீண்டும் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஞாயிற்றுக்கிழமை தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்புளுவென்சா நோய்த் தாக்கம் குறித்த விழிப்புணர்வு பாதிப்பைக் கட்டுப்படுத்த உதவும்

இதனை நடைமுறைப்படுத்து வதற்கு பல்வேறு முறைகள் கையாளப்படு கின்றன. முதலில் ஒரு நோய் உருவாக்கம் பற்றிய தகவல் எவ்வாறு கிடைக்கப் பெறலாம் என்று பார்ப்போமானால் அது ஒரு சமூக மட்டத்தில் இருந்து வரலாம், அல்லது நிறுவனத்தில் இருந்தோ இல்லது நோய்க்குச் சிகிச்சையளிக்கும் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களிடம் இருந்தோ வரலாம். அனேகமாக நோய் உருவாக்கம் பற்றிய தகவலானது நோய்க்குச் சிகிச்சையளிக்கும் உத்தியோகத்தர்களால் இனங்காணப்பட்டு தெரிவிக் கும் சந்தர்ப்பங்களே அனேகம். இது பலவேளைகளில் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதில் தாமதங்களை ஏற்படுத்தி நோய் கூடுதலாகப் பரவி நோயின் தாக்கத்தினை அதிகரிக்க வழிவகுக்கும். ஏனெனில் சில நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வராமலே இறக்க நேரிடலாம் அல்லது அப்பிர தேசத்தை விட்டு வேறு பிரதேசத்திற்கு சென்றிருக்கலாம். சில நோயாளிகள் வைத்தியசாலைக்கு வராமல் நோய் குணமாகியிருக்கலாம். எனவே தொற்று நோய் பற்றிய தகவல் சமூகமட்டத்தில் இருந்து வெளிவருதல் அவுசியம். பிரதானமாக இன்புளுவன்சா நோய் தொற்றுகைக்குள்ளானவர்கள் பற்றிய தகவல்கள் சமூகமட்டத்தில் இருந்து வருதல் மிக மிக அவசியம்.

சமூகத்தில் இருந்து இத்தகைய தகவல்கள் எவ்வாறு கிடைக்கப் பெறலாம்? எவ்வாறு, யாருக்கு இத் தகவலைத் தெரியப்படுத்தலாம்? என்பதைப் பற்றிப் பார்ப்போம். முதலில் சமூகத்தில் இருந்து நோயால் பாதிக்கப்பட்டவர் அல்லது சமூகத்தலைவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மற்றும் நிறுவனத்தலைவர்கள் நோயைப்பற்றி அறியத்தரலாம்.

நோயைப்பற்றி ஒருவர் அறியத் தருவதற்கு அவர்களுக்கு அந்த நோய் பற்றிய அறிவு சரியாகக் கொடுக்கப் படுதல் வேண்டும். இன்புளுவன்சா நோயை எடுத்துக் கொள்வோமானால்

01. இன்புளுவன்சா நோய்த்தொற்றுக்கு உள்ளானவர் என உறுதி செய்யப்பட்டவர்.

02. இருமல், சளி, சுவாசம் சம்பந்தமான நோய் மற்றும் நுரையீரல் அழற்சி என்பற்றுக்கு உள்ளான ஒருவர் மிக அண்மையில் இன்புளுவென்சா நோய் மிகவேகமாகப் பரவும் நாட்டிற்கு அல்லது பிரதேசத்திற்குப் பயணித்திருப்பார்.

03. இன்புளுவன்சா நோய் உறுதி செய்யப்பட்ட ஒருவருடன் நெருங்கிப் பழகியதுடன் மேற்கூறப்பட்ட நோய்க் குணம்குறியைக் கொண்டிருத்தல்

மேற்கூறியவர்கள் ஒரு பிரதேசத்தில் இருப்பர். அது பற்றி சுகாதார அதிகாரி களுக்கு தெரியப்படுத்தல் அவசியம். ஏனெனில் சாதாரணமாக இன்புளுவன்சா நோயானது சாதாரண தடிமன், காய்ச்சல் போன்று நோய்க்குறிகளை கொண்டிருப் பதனால் உண்மையாக இன்புளுவன்சா நோயினால் பாதிப்புற்றவரைக் கண்டு பிடித்தல் கடினமானது. எனவே மேலே குறிப்பிட்டுள்ள எவரும் இருப்பின் அல்லது பிரதேசத்தினுள் புதிதாக வந்திருப்பின் அதனைப் பற்றி அறியத் தருதல் அவசியமாகின்றது.

இலங்கையில் ஒரு பிரதேசத்தின் சுகாதாரத்திற்குப் பொறுப்பானவர் பிரதேச வைத்தியஅதிகாரி ஆவார். எனவே அவருக்கோ அல்லது மாவட்ட தொற்று நோய் தடுப்பு அதிகாரிக்கோ இது பற்றித் தெரியப்படுத்தலாம். அவர் அந்நோயாளி நோய் மற்றும் நோய்க்கான மூலம் என்ப வற்றை ஆராய்ந்து அறிந்து மக்களுக்குத் தெரியப்படுத்துவார். அத்தகைய தகவல் தொடர்பாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன? அவை நோய் குணமாக்குதல் மற்றும் நோய் குணப்படுத்துவதற்கான மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் வழங்கள் என்ப வற்றுக்கு உதவுகின்றன. எல்லா வற்றுக்கும் மேலாக நோயைத் தடுக்கும் வழிமுறைகளுக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதைத் தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்)




## என் கனவுகளில் மட்...!

என்
நினைவுப் பள்ளத்தாக்கில்
நான்
விழுந்து கிடக்கும் போது
பிரகாசமாக
உன் முகம் மட்டும்
ஒளிர்ந்து கொண்டிருக்கிறது
துன்பத்தில் நான்
விழும் போதெல்லாம்
உனது விம்பம்
ஒத்தடமாக என் மனதில்
தடம் பதிக்கத்
தவறுவதே இல்லை
இருந்த போதிலும்
நீ எட்டா ஓவியமாக
என் கையில்
அகப்படாமலேயே......
இன்றோ
வனாந்தர வெளிகளில்
நான்
நடமாடுவது போல........
உன்னை நான்
கரம் பிடிக்கத்
துடிக்கவேயில்லை
அது
எட்டாத் தூரமென்று
உனக்கு மட்டுமல்ல
எனக்கும்
தெரிந்து போன விடயம்
ஆயினும் என் துன்ப நேரங்களிலே
ஒருமுறையாயினும்
சந்தோசப் பெண்ணே
உன் முகத்தை
காட்டிச் சென்று விடு
என் கனவுகளிலாவது ........

அ. சூரியன்,
ஊறணி.

## மாற்றம்



உன் இதயம் போன்று
என் இதயம் ஒன்றும்
பூ இல்லை - இங்கே
சருகுகள் தான்
மிச்ச சொச்சமாய்
அது புயலாகும் போது
உன் பூ....
உதிர்ந்து விடும் என்றும்
நிச்சயமாக.......

சா. ரமேஸ்குமார்,
மீசாலை கிழக்கு.

## நீரிழிவு நோயாளர்களுக்கான பிட்டு

04. சிறு குறிஞ்சாவும், குரக்கன்மாவும் சேர்த்துத் தயாரிக்கப்படும் பிட்டு நீரிழிவு நோயாளிகளுக்கு உகந்த ஒன்றாகும். ஆனால் அவர்கள் இடையிடையே தமது இரத்தத்தில் குளுக்கோசின் அளவையும் பரிசோதித்துக் கொள்வது அவசியமாகும். மலைதாங்கி எனப்படும் . பொன் முசுட்டைத்துளிர் அல்லது பொன்னாவர சந்துளிரை அரிசிமா அல்லது குரக்கன் மாவுடன் சேர்த்துப் பிட்டவித்துச் சாப்பிடு வதும் நீரிழிவு நோயாளிகளுக்கு நன்று. நீரிழிவு நோயாளிகள் குரக்கன்மா, வரகரிசிமா, ஆட்டாமா, தவிட்டரிசிமா என்பவற்றைப் பிட்டவிக்க உபயோகித்தல் வேண்டும்.

05. தென்னம் பூப் பிட்டு

தென்னம்பூவில் பிட்டா? ஆச்சரியமாக இருக்கின்றதா? மடல்விரியாத இளம் தென்னம் பூப்பாளையை எடுத்துக் கொள்ளுங்கள். அதைப்பிளந்து உள்ளே முத்துப்போலிருக்கும் தென்னம்பூ மொட்டுக்களைக் கவனமாகப் பிரித்தெடுத்து வைத்துக்கொள்ளுங்கள். பச்சையரிசியை ஊறவிட்டு உரலில் இட்டு மாவாக இடித்துக் கொள்ளுங்கள். அவ்விதம் இடிக்கும் போது மேற்படி தென்னம் மொட்டுக்களையும் சேர்த்து இடித்து மாவாக அரித்தெடுங்கள். (2 கூண்டு அரிசிக்கு 1/4 கூண்டு தென்னம்மொட்டு போதுமானது) இந்த மாவை வறுத்து எடுத்து அதில் பிட்டு செய்து பெரும்பாடு உள்ள பெண்கள் மாதவிடாய்க் காலத்தில் சாப்பிட்டுவந்தால் அதிக குருதிப் போக்கு ஏற்படு வது மாறும்.












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட மாகாண விளையாட்டு விழாவின் வர்ணப் பதிவுகள்



பிரதமவிருந்தினர்களுக்கு யாழ் உருவச்சிலை தாங்கிய வரவேற்பின்போது....



சங்கானைக் கலைஞர்கள் வழங்கிய பாரம்பரிய பொம்மலாட்டம்.

படத் தொகுப்பு: நேசன், அதிரன், தமிழரசன்.



திருமறைக்கலாமன்றத்தினர் வழங்கிய கிராமிய நாட்டியத்தில் ஒரு காட்சி



யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளின் உடற் பயிற்சி நடனம்



இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களின் சாகசக் காட்சிகளில் ஒன்று



பருத்தித்துறையைச் சேர்ந்த சிறுவர்களும் இளைஞர்களும் வழங்கிய வீரச் சிலம்பாட்டம்.



கபடி போட்டியின் [illegible]
வவுனியா, மன்னார் அணிகள்



கோலூன்றிப் பாயும் யாழ்.வீரர் கிருஸ்நாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று முதல்.....

சந்தை விலையில்.....

the SUNDAY TIMES ரூ.50/=

Vijey விஜய் ரூ.15/=

## எமது விற்பனை முகவர்கள்....

யாழ்ப்பாணம், பேருந்து நிலையம் - பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம், சிவன் கோவிலடி - உமா ஸ்ரோஸ்
யாழ்ப்பாணம், 4 ஆம் குறுக்குத்தெரு - R.இராமச்சந்திரன் நியூஸ் ஏஜென்ட்
நல்லூர், பருத்தித்துறை வீதி - சிவானந்த கபே
திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தி - சிவன் ஸ்ரோஸ்
திருநெல்வேலி, அம்மன் வீதி - சுஜன் குறூப்
கொக்குவில், காங்கேசன்துறை வீதி - பாக்கியா ஸ்ரோஸ்
இணுவில், காங்கேசனதுறை வீதி - தனபாலசிங்கம் நியூஸ் ஏஜென்ட்
சுன்னாகம், மத்திய பேருந்து நிலையம் - துர்க்கா ஸ்ரேசனர்ஸ்
பண்டத்தரிப்பு, கீரிமலை வீதி - சிறி முருகன் புத்தகசாலை
சண்டிலிப்பாய், சீரணி சந்தி - R.S. Communications
மானிப்பாய், ஆலடிச் சந்தி - மெடிலாண்ட்
கோப்பாய், இருபாலை சந்தி - Lycky Fancy House
ஆவரங்கால், புத்தூர் - கிருஸ்ணா மல்டி சொப்
நெல்லியடி, கரவெட்டி - மொடர்ன்ஸ் ஸ்ரோஸ்
பருத்தித்துறை, பிரதான வீதி - கவிதா ஸ்ரோஸ்
சாவகச்சேரி, கண்டி வீதி - மணியம் ஸ்ரோஸ்
மீசாலை, புத்தூர் சந்தி, கண்டி வீதி - சுஜமுகன் ஸ்ரோஸ்
கொடிகாமம், பேருந்து நிலையம் - நியூ அருள்நாயகி புத்தகசாலை

மேலதிக விபரங்களுக்கு 0714 943 854


## கந்தரலங்காரம் நூல் விநியோகம்

வெளிநாடுகளில் வாழும் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த முருகன் அடியவர்கள் பலர் அப்பிரதேச பஜனைச் சபை வெளியீடுசெய்தகந்தலரங்கார நூலைப் பெற்றுக் கொண்டதுடன் பஜனைச் சபையினருக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை லண்டனில் வாழும் சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த அடியார் ஒருவர் கந்தரலங்கார நூலை இலவசமாக வழங்கி பாடல்களை மனனம் செய்பவர்களுக்கு பரிசில் வழங்கி ஊக்குவிக்க உதவி செய்யக் காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (28-201)

## ரெலிகொம் அலுவலகத்துக்கு இரண்டு ஓட்டோக்கள்

யாழ் ரெலிக்கொம் நிறுவனத்திற்கு கொழும்பிலிருந்து இரண்டு ஓட்டோ வாகனங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. இந்த ஓட்டோ வாகனங்கள் தரைப் பாதையூடாக கொன்ரைனர்வாகனம்மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன. (201-224)


## மோட்டார் சைக்கிள் திடீரென தீப் பற்றியது

மோட்டார் சைக்கிளை இயக்கிய போது அது திடீரென தீப்பற்றிய சம்பவம் கடந்த வாரம் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு சமீபமாக இடம்பெற்றுள்ளது

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது:-

மேற்படி மோட்டார்சைக்கிளிலிருந்து பெற்றோல் கசிந்துள்ளதாகவும் இயக்கிய போது அது வெளிகோப்பு (உடல்) பகுதியில் தீப் பற்றிய வேளை அருகில் உள்ளவர்கள் உடனடியாக மண்ணை அள்ளிப் போட்டு தீயை அணைத்ததால் பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்விபத்து நடந்த இடத்தில் மேலும் பல மோட்டார் சைக்கிள்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (50-72)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 | 24 |
| 03 | 08 |
| 1946 | 2009 |

## அமரர் தம்பிராசா வாமதேவன்

மாதம் ஒன்று ஆனதே - ஆனால்
மறக்கவில்லை உங்கள் மதிமுகம் ஐயா!
தேடிப் பார்க்கின்றோம் பார்தனில் உங்கள் வரவதனை
ஏமாற்றமே கிடைத்தது எமக்கையா!
ஈசன் திருவடியில் - உங்கள்
ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் பிரிவால்
துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய். (89031)

# முதலாம் ஆண்டின் நினைவலைகள்



ஜனனத்தின் சுகத்தில் 14-04-1976

மரணத்தின் சுமையில் 03 - 10 - 2008

சரவணைநர்

## அமரர் சபாரத்தினம் சசிகுமார் (B.Com)


திதி: 23.09.2009 (பஞ்சமி)

அன்பின் ஊற்றே!
ஆதரவின் உறைவிடமே
பண்பின் சிகரமே!
பார்போற்றும் உத்தமனே!
ஆலமரமாய் நீயிருந்து - எம்மை
ஆளாக்கிய புதல்வனே!
ஆண்டொன்று சென்றதுவோ?
மீளாத்துயர் கொண்டு நாம் வாழ
நீண்ட உன் வாழ்வுதனை
நிலைக்கவிடவில்லை நம் கயவர்கள்
அலை அலையாய் உன் நினைவுகள்
எம்மை அல்லாட வைக்குதையா!
நீ நடந்த பாதையெல்லாம் - உன்
நிழல் தேடி அலைகின்றோம்
இன்று நிழலுமில்லை நிஜயமுமில்லை

இந்நாளில் உம் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

அம்மன் வீதி,
சிவாஸ் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (89072)

# 25 ஆம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 29 |
| 07 | 09 |
| 1910 | 1984 |

## அமரர் செல்லையா சொக்கநாதன்

(இளைப்பாறிய P.W.D. ஓவசியர்)

திதி: பூர்வபஞ்சமி (23.09.2009)

**அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்த
எங்கள் ஐயாவே! கால் நூற்றாண்டு
ஓடி மறைந்தாலும் உங்கள் இனிய நினைவுகள்
எங்களை விட்டகலாது ஐயா!
நவராத்திரிப் பொன் நாளில்
அம்பாளின் திருக்கமலங்களில்
சரணடைந்து விட்டீர்கள் ஐயா...**

**மனைவி:** திருமதி பவளம் சொக்கநாதன்
**பிள்ளைகள்:**
நடராசா செல்வநாயகம் குடும்பம் (பிரம்படி),
சொக்கநாதன் யோகநாதன் குடும்பம் (பிரம்படி),
கணபதிப்பிள்ளை செல்வநாயகம் குடும்பம் (சுவிஸ்),
சொக்கநாதன் யோகேஸ்வரன் குடும்பம் (கொழும்பு),
சொக்கநாதன் கணேஸ்வரன் குடும்பம் (கனடா),
இராசையா மனோகரன் குடும்பம் (பிரம்படி),
வல்லிபுரம் தம்பிராசா குடும்பம் (பிரம்படி),
முதலித்தம்பி ஞானேந்திரன் குடும்பம் (தெல்லிப்பழை).

பாலன் வளவு,
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.
(89068)


## BRITISH BUSINESS SCHOOL பாலர் பாடசாலை
## விஜயதசமி அன்று வித்தியாரம்பம்

2010 ற்கான புதிய அனுமதிகள்

மிக விரைவில் கல்வியங்காட்டில் புதிய கிளை

* ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம் தமிழ் மொழி கட்டாயபாடம்.

| | |
|---|---|
| PLAY GROUP | 2-3 Years |
| MONTESSORI | 3-4 Years |
| PRE-SCHOOL | 4-5 Years |

விசேட நிகழ்ச்சிகள்
English Concert, முத்தமிழ் விழா, ஒளி விழா, பட்டமளிப்பு விழா, Sports Meet
மாணவர் சித்திரம்/கைவேலைக் கண்காட்சி

நல்லூர் (1) : இல:140, கோவில் வீதி, நல்லூர்.
மானிப்பாய் : இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய்.
சுன்னாகம் : லக்சுமி கோட்டேச் கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
புலோலி : Dr.ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை, புலோலி.

BRITISH BUSINESS SCHOOL
HOT LINE: 021-222 5796,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்கள் உச்சக் கல்வி வசதியைப் பெற நாம் உதவுவோம்

## 552ஆவது படையணியின் தளபதி ஹேமந்த உரை

யாழ்ப்பாணம்,செப்.23

மாணவர்கள் நலன்புரி நிலையங்களில் இருக்கும்வரை அவர்கள் அதிஉச்ச கல்வி வாய்ப்புக்களைப் பெறுவதற்கு நாங்கள் உதவுவோம். உங்கள் அனைவரையும் உங்களது சொந்த இடங்களில் குடியேற்ற வேண்டும் என்பதே எமது திட்டமாகும் என கொடிகாமம் இராமாவில் முகாமில் அமைந்துள்ள பாடசாலைக்குப் புதிய மாணவர்களை அனுமதிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய 552ஆவது படைப் பிரிவின் பொறுப்பதிகாரி கேணல் ஹேமந்த பண்டார தெரிவித்தார்.

இராமாவில் நலன்புரி முகாமில் தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிய மாணவர்களை இணைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் கே. கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கேணல் ஹேமந்த பண்டார மேலும் கூறியதாவது:


இங்குள்ள பல பாடசாலைகளில் இன்னமும் கணனி வசதிகள் இல்லையென ஒரு பாடசாலை ஆசிரியர் என்னிடம் குறைப்பட்டுக் கொண்டார். எமது முகாமில் அமைந்துள்ள இந்தப் பாடசாலைக்குக் கணனிக் கல்வி வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காகச் சம்பந்தப்பட்டவர்களிடம் தொடர்பு கொண்டு இந்த வசதியை இன்று ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். ஓர் ஆய்வு கூடம் அமைக்கவும், கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்வோம். புதிய மாணவர்களை இணைப்பது தொடர்பான ஏற்பாடுகளை மிகவும் குறுகிய காலத்தில் திறம்படச் செய்துள்ளார்கள். மாணவர்கள் தமது நிகழ்வுகளில் மிகவும் திறமையை வெளிப்படுத்தியுள்ளார்கள். சிறிய இடைவெளியில் மாணவர்களைச் சிறந்த முறையில் செயல்படக்கூடிய ஆற்றலை வளர்க்க முடிந்த ஆசிரியர்கள் இந்த மாணவர்களை கல்வியில் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வதில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்களாக விளங்குவார்கள். ஆசிரியர்களைநான் பெரிதும் பாராட்டுகின்றேன். மாணவர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட வேண்டும். மிருசுவிலில் இருந்து வந்துள்ள நீங்கள் நல்ல முறையில் கவனிக்கப்படுவீர்கள் என உத்தரவாதம் அளிக்கின்றேன். கல்வியில் உயர்ந்த நிலை உங்களுக்கு வழங்கப்படும் இவ்வாறு ஹேமந்த பண்டார கூறினார். (50-111)

# சைவசமய அருள்நெறி மன்றத்தின் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.23

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தின் கூட்டம் அண்மையில் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன், யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம், கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை அதிபர் ப.லலீசன் ஆகியோர் உட்படப் பலர் கருத்துரை வழங்கினர். (50-204)



கொழும்பு மறை மாவட்ட ஆயரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு நேற்று முன்தினம் மாலை நல்லிணக்க அடிப்படையில் விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு பேராயர் வண. டாக்டர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# இராமாவில் நலன்புரி நிலையப் பாடசாலையில் 487 மாணவர்கள் நேற்று இணைந்து கொண்டனர்

யாழ்ப்பாணம்,செப்.23

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் அமைந்துள்ள தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிய மாணவர்களை இணைக்கும் நிகழ்வில் கைதடி நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த 91 பிள்ளைகளும் மிருசுவில் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த 396 பிள்ளைகளுமாக 487 மாணவர்களும் மற்றும் 13 ஆசிரியர்களும் நேற்று இணைந்து கொண்டனர்.

பாடசாலை அதிபர் கே.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக 552ஆவது படைப்பிரிவின் அதிகாரி கேணல் ஹேமந்த பண்டாரவும், சிறப்பு விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் கே. பிறேமகாந்தனும் மற்றும் படை அதிகாரிகள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக சி.முகாமில் இருந்து புதிய மாணவர்கள், விருந்தினர்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் 'பாண்ட்' வாத்திய அணி வகுப்புடன் பாடசாலைக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

புதிய மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாடசாலையின் மாணவர்களும் ஆசிரியர்களும் மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்றனர்.

பாடசாலையின் புதிய கணனி அறையை கேணல் ஹேமந்த பண்டாரவின் வேண்டுகோளுக்கிணங்கத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தன் திறந்து வைத்தார். மாணவர் தலைவர்களுக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (50-111)

# யாழ்.ஆஸ்பத்திரியில் காச நோயாளருக்கு தனியான விடுதி அமைக்க ஆலோசனை

யாழ்ப்பாணம், செப்.23

யாழ்.போதனா வைத்தியசாலையில் காசநோயாளர்களுக்கெனத் தனியான விடுதி ஒன்றை அமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டக் காசநோய்க் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். யமுனானந்தா இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை பல வருடங்களாக இயங்காமல் முடங்கிக் கிடக்கின்றது.

இதனால் தற்போது காசநோயாளர்களுக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் தனியான விடுதி ஒன்றை அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு வைத்தியசாலை நிர்வாகத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார்.

தற்சமயம் பண்ணையில் காசநோயாளர்களுக்கு சிகிச்சை நிலையம் இயங்கி வருகிறது. அங்கு விடுதி வசதி இல்லாததையடுத்தே யாழ்.ஆஸ்பத்திரியில் தனியான விடுதி அமைக்க ஆலோசனை செய்யப்படுகிறது. (50-224)

# சம்பள உயர்வு கோரி 7 ஆயிரம் ஊழியர் இன்று சுகவீன லீவுப் போராட்டத்தில் குதிப்பர்

கொழும்பு,செப்.23

சம்பள உயர்வு மற்றும் பதவி உயர்வு குறித்த விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை என்பதைக் கண்டித்து இன்று புதன்கிழமை அரசாங்க ஊழியர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நாடு முழுவதிலும் சுமார் ஏழாயிரம் அரசாங்க ஊழியர்கள் இந்தச் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்று அகில இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனங்களின் ஏற்பாட்டாளர் அன்ரன் பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் திணைக்களங்களில் உள்ள ஏழு தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் குறிப்பாகக் கணக்காளர்கள், பொறியியலாளர்கள், கல்வித்துறை அதிகாரிகள், கல்விசாரா ஊழியர்கள், அரச உயர் அதிகாரிகள், விலங்கியல் மருத்துவர்கள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் உட்பட அரச துறையைச் சேர்ந்த பலரும் இந்தப் போராட்டத்தில் பங்கு கொள்வார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்த சுகவீன விடுமுறைப் போராட்டத்திற்கு அரசாங்கம் உரிய பதில் வழங்கவில்லையானால் பாரிய வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெறும் என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை அரச ஊழியர்களின் சுகவீன விடுமுறைகள் அனைத்தையும் ரத்துச் செய்யும் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இன்று வெளியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சுகவீன விடுமுறைப் போராட்டம் அரசியல் நோக்கம் கொண்டது என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குற்றம் சாட்டியுள்ளார். (1)



கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத் தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிய மாணவர்களை இணைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வின்போது விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும் வித்தியாலய மாணவர்கள் புதிய மாணவர்களை மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்பதையும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தன் கணனி அறையைத் திறந்து வைப்பதையும் முதல் மூன்று படங்களில் காணலாம்.

பாடசாலை அதிபர் கே.கஜேந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரநாதன், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கேணல் ஹேமந்த பண்டார ஆகியோர் உரையாற்றுவதையும் ஹேமந்த பண்டார மாணவர் ஒருவருக்குச் சின்னம் சூட்டுவதையும் புதிதாக இணைந்து கொண்ட மாணவர்களையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி நன்றி செலுத்துகிறோம்

11.09.2009இல் கொழும்பு சுகததாசா விளையாட்டரங்கில் நடைபெற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் 5 ஆவது தேசிய இளைஞர் மெய்வல்லுநர் போட்டியில் இ.செ.சங்க யாழ். மாவட்ட இளைஞர்கள் பங்குபற்றுவதற்கு பயண ஏற்பாடுகளை எமக்கு ஏற்படுத்தித்தந்த மாண்புமிகு அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா (சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்) அவர்களையும், யாழ். மாவட்ட அமைப்பாளர் தோழர் உதயன் அவர்களையும் நாம் பாராட்டி நன்றி செலுத்துகிறோம்.

இலங்கை செஞ்சிலுவை சங்கம்,
இளைஞர் வட்டம்,
யாழ்.கிளை.
(சி/ 560980)



## தூய ஆரோக்கிய அன்னையின் திருவிழா
### யாழ். போதனா வைத்தியசாலை
### 27.09.2009

| | |
|---|---|
| 24.09.2009 வியாழக்கிழமை | பகிர்ந்து வாழ அழைக்கும் பரமன் இயேசு |
| 25.09.2009 வெள்ளிக்கிழமை | மனமாற்றத்துக்கு அழைக்கும் அன்பர் இயேசு |
| 26.09.2009 சனிக்கிழமை | குணமளிக்கும் இயேசு குணம்பெற அழைக்கின்றார் (குணமாக்கல் வழிபாடு) |
| 27.09.2009 ஞாயிற்றுக்கிழமை | இயேசுவின் தாய் ஏழைகளின் இணையற்ற நம்பிக்கை |

நவநாள் வழிபாடுகள் தினமும் பி.ப.4-15 மணிக்கு ஆரம்பமாகும்.
திருவிழாத் திருப்பலி 27.09.2009
அன்று காலை 7.15 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.
நவநாள்களிலும் திருவிழாத் திருப்பலியிலும் முழுமையாகப் பங்குபற்றி பயன்பெற அன்போடு அழைக்கின்றோம்.
(89080) ஆன்ம குருவும், நலன் விரும்பிகளும்.


# யாழ்.கூட்டுறவுத் துறையின் பிரச்சினைகள் குறித்து ஆராய விரைவில் ஜனாதிபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், செப்.23

யாழ்.குடாநாட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதிக்கும் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் விரைவில் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்படும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர்கள் நேற்று அமைச்சரை அமைச்சின் யாழ்.அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

அப்போது சங்கங்கள் தற்போது எதிர்நோக்கும் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடி குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

சங்கப் பிரதிநிதிகளை விரைவில் ஜனாதிபதியுடன் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகளைத் தான் மேற்கொண்டு தருவதாக அப்போது அமைச்சர் கூறினார்.

கூட்டுறவு அமைப்புக்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தான் நன்கு அறிந்திருப்பதாகக் கூறிய அமைச்சர், விரைவில் அவற்றை அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுப்பதாக சுட்டிக்காட்டினார்.

இக் கலந்துரையாடலில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்டனர். (50-224)

## அதிபர்களுக்கான கூட்டம்

கோப்பாய், செப்.23

கோப்பாய் கல்விக்கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும் என கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சித்திரவடிவேல் அறிவித்துள்ளார். (201-72)

## பருத்தித்துறைப் பிரதேசத்தில் 13 வேலைத்திட்டங்கள்

கரவெட்டி, செப்.23

இந்த வருடத்துக்கான வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் முதலாவது பட்டியலின் பிரகாரம் 9 லட்சத்து 15 ஆயிரம் ரூபா செலவில் 13 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (50-7)


## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி வடக்கு,
தவளக்கிரி முத்துமாரி அம்மன்
ஆலய உப செயலாளர்
உயர்திரு.
### சிவசம்பு செந்தில்நாதன்
அவர்களின் திடீர் மரணம் எங்கள் அனைவரினது உள்ளத்திலும் மிகவும் ஆழ்ந்த கவலையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எம் பிராட்டியைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அளவெட்டி வடக்கு, அளவெட்டி. (89090) தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையினர்.

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் மத்தி, மேற்கு (J/128)
கிராம உத்தியோகத்தர் திரு.ப. வசந்தகுமார்
அவர்களின் அன்புத் தந்தை
### வல்லிபுரம் பரமலிங்கம்
(முன்னாள் கிராம சபைத் தலைவர், கொக்குவில்)
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், நல்லூர். (சி/ 560981) நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நலன்புரிச்சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### சிவசம்பு செந்தில்நாதன்
(வங்கி முகாமையாளர், Bank of Ceylon, Jaffna)



அளவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு செந்தில்நாதன் 20.09.2009 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் க.சிவசம்பு (இளைப்பாறிய ஆசிரியர், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான Dr.இராசரத்தினம்-இரத்தின பூபதி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவமலரின் அன்புக் கணவரும் அபிராமி (ஆசிரியை, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), மயூரன் (லண்டன்), நிவேதிதா (மாணவி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி-2010 வர்த்தகப் பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், லிங்கராஜ்சின் (ஆசிரியர், திருக்குடும்பக் கன்னியர்மடம்) அன்பு மாமனும் யருஷனின் அன்புப் பேரனும் சிவநாதன் (சாவகச்சேரி) லோகநாதன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவதாசன் (கொழும்பு), சிவரஞ்சனி (கனடா), புவிராஜ் (கொழும்பு), தியாகேஸ்வரி (சாவகச்சேரி), லோகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.09.2009) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.11 மணியளவில் வண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், இலங்கை வங்கி ஊழியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

566, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.
தொ.பே: 0212225205
(89087)

### திருமதி சரஸ்வதி சேனாதிராசா
(முன்னாள் பிரபல வர்த்தகரும் சேனாதிராசா அன்சன்ஸ் உரிமையாளரும்)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி சேனாதிராசா (20.09.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் துரைச்சாமி சேனாதிராசா அவர்களின் அன்பு மனைவியும் லோகநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான இந்துநாதன், கிருபா, வேலும் மயிலும், பபி, கருணா மற்றும் தமயந்தி (கனடா), கமலேஸ்வரி, சாவித்திரி, மோகனதாஸ் ஆகியோரின் அன்புத் தாயும் இராமலிங்கம், சபேசன் (சட்டத்தரணி), செபஸ்ரியன், சோமேஸ்வரி, தியாகராசா (கனடா), விஜயகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் திருநாவுக்கரசு, துரை, மனோரஞ்சிதம் (கனடா), ஜெயரஞ்சிதம் (பிரான்ஸ்), பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.09.2009) புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

226, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (89081)

தகவல்:
இ.சபேசன் (சட்டத்தரணி),
சேனாதிராசா குடும்பத்தினர்.

## சஷ்டியப்த பூர்த்தி வாழ்த்து (23.09.2009)

உ
சிவமயம்



இன்று நூறாவது அகவையை நிறைவு செய்யும் எங்கள் ஐயா சைவத்திரு
### திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி
(முன்னாள் ஆசிரியர், சைவப்பிரகாச வித்தியாசாலை, மகாஜனக் கல்லூரி)
அவர்கள் குலதெய்வம் குருநாத சுவாமி திருவருளால் நலமுடன் நீடுழி வாழப் பிரார்த்திப்பதோடு இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

யாமா வளவு,
தெல்லிப்பழை.

என்றும் உங்கள் இனிய
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(89062)

## பாராட்டி வாழ்த்துகின்றேன்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் செல்லும் இ.போ.ச.பஸ்வண்டியில் கடந்த 16.09.2009 அன்று தவறவிடப்பட்ட எனது பெறுமதி வாய்ந்த நகைகளையும், பணத்தையும் கண்டெடுத்து என்னிடம் ஒப்படைத்த கோண்டாவில் டிப்போ காப்பாளர் பொ.சிவச்செல்வனையும் சாலை முகாமையாளர் ரி. யோகநாதனையும் பொது முகாமையாளர் கே.கணேசபிள்ளையையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

(89084) பா. பாலச்சந்திரன்

## வேலையாள்கள் தேவை

ஹோட்டல் துறையில் அனுபவமும், ஆர்வமும், மேலதிக நேரம் வேலையைச் செய்யக் கூடியவர்கள் கீழ்வரும் பதவி நிலைகளுக்கு விண்ணப்பிக்கவும்.

Manager (முகாமையாளர்)
Room Boys (அறைக் காப்பாளர்)
MULTI DUTY OFFICER
(இத்துறையில் சகல வேலைகளும் செய்யக்கூடியவர்)

27.09.2009 இற்கு முன் 8.00 மணி தொடக்கம் 12.00 மணிக்குமிடையில் நேரில் வரவும்.

பஸ்ரியன் ஹோட்டல்,
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(89086)

## குத்தகைக்கு

கோப்பாய் தெற்கிலுள்ள நெற்காணி உடன் குத்தகைக்கு உண்டு.
தொடர்பு: 011 2559349
(சி/560691)

## தவறிவிட்டது

நீதிமன்ற வீதி, மல்லாகம் என்னும் முகவரியுடைய நம்பிராசா பிரதீபன் என்பவரது தேசிய அ. அட்டை (840874079V) 19.09.2009 சனிக்கிழமை சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து முத்தட்டுமட வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியுடனோ அல்லது தொ.பே.இலக்கத்துடன் 0777 9803030 தொடர்பு கொள்ளவும்.
(89082)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

★ புறோயிலர் குஞ்சுகள்
★ பேட்டுக் குஞ்சுகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.
மொத்த வியாபாரிகளுக்கு விசேடகழிவு உண்டு.
தொடர்புகளுக்கு: அபிசா ரேடர்ஸ்,
K.K.S றோட், யாழ்ப்பாணம்.

இதோ!
ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி. தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

## பீம் வாசக சிரப் (Vasaka Syryp)
இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
Beam Hela Osu Lanka
High Level Road,
Kottawa, Pannipitiya
Ayu D.M.Reg.No: 165

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறிமீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

Manufactured By:
Sithara Products
Puttalam, Road, Chilaw.
(Reg.No: 6382)AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா,
இல.288.ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

## உளம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி



### அமரர் றெக்ஸ் கிறிஸ்ரி

இறைபதம் எய்திய செய்தி கேட்டு உளம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஈடு செய்ய முடியா இழப்பினால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பணம் செய்து அன்னாரின் ஆத்மா இறைவனில் இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பற்றிமா லேன்,
பண்டத்தரிப்பு. (89079)

அருளானந்தம் குடும்பத்தினர்
(பபி - மாமா).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் சூடானில் இன மோதல்கள்; நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழப்பு

கார்ட்டூம், செப். 23

தென் சூடானில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் சுமார் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இரண்டு இனக் குழுக்களுக்கிடையே மூண்ட மோதல்களில் இந்த உயிரிழப்புகள் நேர்ந்துள்ளன என சூடானிய இராணுவம் அறிவித்துள்ளது.

''லூ நூர் இனத்தவர்களுக்கும், டுக் பேடியட் இனத்தவர்களுக்குமிடையில் தென் சூடானில் இந்த மோதல்கள் இடம் பெற்றுள்ளன. இவ்விரு இனத்தவர்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள மோதல்களில் இவ்வாண்டில் மட்டும் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரழந்துள்ளனர்'' என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

தென் கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள சிறிய நாடு சூடான். எகிப்து நாட்டின் பிடியிலிருந்த இந்த நாடு 1956 ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. சூடானில் லுநியூர்,ஜாங்லி என்ற இரு வகையான பழங்குடிகள் உள்ளனர். இவ்விரு இனங்களும் அடிக் கடி மோதிக்கொள்கின்றன. கடந்த மாதம் ஏற்பட்ட மோதலில் 185 லுநியூர் பழங்குடிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனால் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் கடுமையான கோபத்துடன் இருந்தனர். பழிக்குப் பழிவாங்க சரியான நேரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இரு தரப்புகளுக்குமிடையே சனிக்கிழமை திடீர் மோதல் ஏற்பட்டது. அது பெரும் கலவரமாக மாறியது. லுநியூர் பழங்குடிகள் ஜாங்லி இனத்தவர்கள் வாழும் கிராமங்களைச் சூழ்ந்துகொண்டு தாக்கினார்கள்.

இதில் ஜாங்லி இனத்தைச் சேர்ந்த சுமார் 100 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தகவலை சூடானிலுள்ள ஐ.நா. சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பழங்குடியின மக்களின் மோதல்களில் இந்த ஆண்டு மட்டும் 2 ஆயிரம் பேர் சூடானில் கொல்லப்பட்டுள்ளனர்.

# தாய்லாந்து கண்காட்சியில் 25.5 கோடி ரூபா நகைகள் கொள்ளை

பாங்கொக், செப். 23

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் நடைபெற்ற தங்க நகைகள், இரத்தினக் கற்கள் ஆகியவற்றைக் கொண்ட கண்காட்சியில் 25.5 ரூபா கோடி மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டன.

நகைக் கண்காட்சி நடைபெற்ற வளாகத்தில் ஒரு கடைக்குள் சனிக்கிழமை 3 பேர் கொண்ட கும்பல் நுழைந்தது. கடையிலிருந்த வியாபாரியிடம் ஒரு குறிப்பிட்ட நகைப் பெட்டியிலிருந்த நகைகளைக் காட்டுமாறு அது கேட்டது.

அக்குழு குறிப்பிட்டுக் காட்டிய நகைப் பெட்டியை கடைக்காரர் எடுத்துக் காட்டினார். அப்பெட்டியில் 100 இற்கும் மேற்பட்ட நகைகள் இருந்தன. அவற்றின் மதிப்பு 25.5 கோடி ரூபாவாகும்.

கடைக்காரரின் கவனத்தை அம் மூவரும் திசைதிருப்பி, கண் இமைக்கும் நேரத்தில் நகைப்பெட்டியைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இத்தகவலைப் புலனாய்வு அதிகாரி பெய்ரோதி ரட்டனமணி தெரிவித்தார்.

தாய்லாந்தில் சமீபத்தில் நடைபெற்ற கொள்ளைகளில் இது மிகப் பெரியது. கொள்ளையர்களைத் தீவிரமாகத் தேடிவருகிறோம் என பாங்கொக் பொலிஸார் தெரிவித்தனர்.

# பிரான்ஸ் முன்னாள் பிரதமர் மீதான வழக்கு விசாரணைகள் ஆரம்பம்

பரிஸ், செப். 23

பிரான்ஸ் முன்னாள் பிரதமர் டொமினிக் டி வில்பான், தமது பழைய அரசியல் எதிரியான தற்போதைய பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசியைக் களங்கப்படுத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் தொடுக்கப்பட்ட வழக்கின் விசாரணை பரிஸில் ஆரம்பமாகியுள்ளது.

நிக்கோலஸ் சர்கோசி முன்னர் உள்துறை அமைச்சராக இருந்தார். அப்போது அவரை களங்கப்படுத்த டி வில்பான் முயன்றார் என இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி விரும்பியதாலேயே இந்த வழக்கின் விசாரணையை தாம் சந்திக்க நேர்ந்துள்ளது என டி வில்பான், நீதிமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார். இந்த வழக்கிலிருந்து தாம் முழுமையாக விடுவிக்கப்படுவார் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த வழக்கு 2004 ஆம் ஆண்டு இவர்களிருவரும் தம் கட்சியின் ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுவதற்காகப் போட்டியிட்ட காலகட்டத்துடன் தொடர்புடையது.

அப்போது சர்கோசிக்கு எதிரான நீதிமன்ற ஊழல் புலனாய்வில் டி வில்பான் தலையிட்டு சர்கோசியின் நற்பெயரை கெடுக்க முயன்றார் என இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## உலக அரங்கில்

# அணுவாயுத உற்பத்தி குறித்த குற்றச்சாட்டை ஏற்கமுடியாது

## ஈரானிய உச்சமட்டத் தலைவர்

தெஹ்ரான், செப். 23

அணுவாயுத உற்பத்தி தொடர்பாக அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் ஈரான் மீது இடைவிடாது சுமத்திவரும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என ஈரானிய உச்சமட்டத் தலைவர் அயத்தொல்லா அலி கமெய்னி தெரிவித்துள்ளார்.

அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதற்கான எந்தவொரு திட்டமும் ஈரானிடம் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானுக்கு எதிரான பாதுகாப்புத் திட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட உள்ளது என அமெரிக்கா விடுத்திருந்த அறிவிப்பிற்குப் பதிலளிக்கும் வகையில் இவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் நலத்திட்டங்கள் என்ற போர்வையில் ஈரான் அணுவாயுதங்களை உற்பத்தி செய்துவருகிறது என மேற்குலக நாடுகள் குற்றம் சுமத்தி வருகின்றன.

அணுவாயுதக் களைவு தொடர்பாக ஆறு முக்கிய நாடுகள் ஈரானுடன் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பேச்சுகளில் மீள ஈடுபடவுள்ளன.

# குவாண்டனாமோ கைதிகளுக்கு அபயமளிக்க சுவிஸ் நடவடிக்கை

சூரிச், செப். 23

அமெரிக்காவின் குவாண்டனாமோ தடுப்பு முகாமிலுள்ள கைதிகளுக்கு அடைக்கலம் கொடுக்க சுவிற்சர்லாந்து முன்வந்துள்ளது. இதுதொடர்பாக ஆராய்வதற்கு சுவிற்சர்லாந்து அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்று இத்தடுப்பு முகாமுக்கு விஜயம் செய்தது. கைதிகளுக்கு அடைக்கலம் கொடுப் பதற்கான நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களை இக்குழு திரட்டியுள்ளது என சுவிற்சர்லாந்து நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

சுவிற்சர்லாந்தின் இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது. மனிதாபிமான ஒரு திட்டம் என இதுகுறித்து மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

குவாண்டனாமோ தடுப்பு முகாமில் தற்போது தண்டனை அனுபவித்துவரும் கைதிகள் விடுதலை செய்யப்படுமிடத்து, அவர்களில் சிலருக்கு அரசியல் தஞ்சம் வழங்கத் தான் தயார் என சுவிற்சர்லாந்து ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதியாக தாம் பதவியேற்றதும் பராக் ஒபாமா, இம்முகாமை மூடிவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதற்கான உத்தரவையும் பிறப்பித்துள்ளார்.

# பருவநிலை மாறுபாடு மாநாட்டில் இந்தியச் சிறுமி யுகரத்னா உரை

நியூயோர்க், செப். 23

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பருவநிலை மாறுபாடு குறித்த மாநாட்டில் இந்தியச் சிறுமி உரையாற்றினார்.

ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தலைமையில் நடைபெற்ற பருவநிலை மாறுபாடு தொடர்பான இம் மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உட்பட பல்வேறு உலக நாடுகளிலிருந்து 100 இற்கும் மேற்பட்ட தலைவர்கள் கலந்துகொண்டனர்.

ஐ.நா. பொது சபையில் நடைபெற்ற இம்மாநாட்டில் உலகில் உள்ள 300 கோடி குழந்தைகளின் சார்பாக இந்தியச் சிறுமி யுகரத்னா ஸ்ரீவாஸ்தவா (வயது 13) உரையாற்றினார்.

இச்சிறுமி உத்தரப் பிரதேச மாநிலம் லக்னொவில் செயின்ட் ஃபிடெலிஸ் பள்ளியில் 9 ஆம் வகுப்பில் பயிலும் மாணவியாவார்.

இவர் வருங்கால சந்ததியினருக்கு மாசற்ற புவியை விட்டுச் செல்வதற்கு நிகழ்கால தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்தை வலியு றுத்திப் பேசினார்.

ஸ்ரீவாஸ்தவா, ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டத்தின் இளைஞர் அமைப்பான தன்ஷாவில் ஓர் உறுப்பினராக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச துருப்புகளின் எண்ணிக்கை ஆப்கானில் அதிகரிக்கப்படவேண்டும்

## அமெரிக்கத் தளபதி வலியுறுத்து

''சர்வதேச துருப்புகளின் எண்ணிக்கை ஆப்கானில் அதிகரிக்கப்படவேண்டும். அத்துடன், ஆப்கான் படையின் பலமும் மேம்படுத்தப்படவேண்டும். அதுவரை, அங்கு நீண்டகாலத்துக்கான அமைதி திரும்ப வழியில்லை'' என செப் ஹதுல் லாஹ் சன்ஜர் என்னும் ஆலோசகர் குறிப்பிட்டுள்ளார்.

''அதேவேளை, அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும். அத்துடன், இராணுவ யுக்திகளில் முக்கிய மாற்றங்களும் செய்யப்படவேண்டும். இல்லையேல், இராணுவ முயற்சிகள் தோல்வியையே தழுவக்கூடும்'' என அமெரிக்கத் தளபதி ஜெனரல் ஸ்டான்லி மக் கிரிஸ்டல் எச்சரித்துள்ளார்.

இம்மாநாட்டில் சமீபத்தில் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் பங்கேற்கவில்லை.

''ஐக்கிய நாடுகள் சபை எனக்கு முக்கியமில்லை. நாடு (ஆப்கானிஸ்தான்) மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது. எனவே, நாடுதான் முக்கியம்'' என அவர் ஏற்கனவே சூசகமாக இதனைத் தெரிவித்திருந்தார்.

சமீபத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் [illegible] சதவீதம் வாக்குகளைப் பெற்று முதல் சுற்றிலேயே கர்சாய் வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்லா அப்துல்லா 27.7 சதவீதம் வாக்குகள்தான் பெற்றார்.

ஆப்கானின் இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஊழல் நடந்துள்ளது. 15 லட்சம் கள்ள வாக்குகள் போடப்பட்டுள்ளன என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. எனவே, தற்போது நாட்டில் அரசியல் நிலைமை ஸ்திரதன்மையற்ற நிலையில் உள்ளது. எனவே, ஐ.நா. மாநாட்டில் இவர் பங்கேற்கவில்லை எனக் கூறப்படுகிறது.

# வேலை கிடைக்காத இந்திய மாணவர் ஆஸ்திரேலியாவில் தற்கொலை

மெல்போர்ன், செப். 23

ஆஸ்திரேலியாவில், இந்திய மாணவர் குர்ஜிந்தர் சிங் (வயது 20) வேலை கிடைக்காத விரக்தியில் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இவர் 3 மாதங்களுக்கு முன்னர் லா டிராப் பல்கலைக்கழகத்தில் மாணவராகச் சேர்ந்தார். வேலை செய்துகொண்டே படிக்க விரும்பிய இவருக்கு வேலை கிடைக்கவில்லை. இதனால் விரக்தியில் இருந்தார். இந்நிலையில், மெல்போர்ன் நகரில் தான் தங்கியிருந்த அறையில் தூக்குப் போட்டு இவர் தற்கொலை செய்துகொண்டார்.

சிங்கின் குடும்பத்துக்கு இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய மாணவர்கள் மீது மெல்போர்ன் உட்பட ஆஸ்திரேலிய நகரங்களில் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், இந்திய மாணவர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து ஆஸ்திரேலியாவில் படிக்கும் இந்திய மாணவர்கள் சம்மேளன நிறுவுநர் கௌதம் குப்தா கூறுகையில், ''இது விரக்தியின் வெளிப்பாடு. இங்குள்ள அரசு நிர்வாக, கல்வி அமைப்புகள் ஒழுக்கற்றவை என்பதையே இச்சம்பவம் காட்டுகிறது'' என்றார்.

''விக்டோரியா [illegible] பிரம்பிதான் இம் மரணத்துக்குப் பொறுப்பேற்கவேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சீனத் தலைநகர் பீஜிங்கில் சுவிஸ் ஒக்கஸ்ட்ரா இசைக்குழு

சூரிச், செப். 23

சுவிற்சர்லாந்தின் மிகப் பெரிய பிரபலமான லூசர்ன் ஒக்கஸ்ட்ரா இசைக்குழு சீனாவில் இசை நிகழ்ச்சியொன்றை நடத்தியுள்ளது.

சீனாவின் தலைநகரான பீஜிங் நகரில் முதன்முறையாக இந்த சுவிஸ் ஒக்கஸ்ட்ரா குழு இசை நிகழ்ச்சியொன்றை நடத்தியுள்ளது.

அதேவேளை, இக்குழு ஆறு தினங்கள் தொடர்ச்சியாக சீனாவில் பல்வேறு இசை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு சிம்பொனி இசை நிகழ்ச்சிகளையும் இக்குழுவினர் நடத்தவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பறக்கும் ரயிலை நிறுத்திய குழந்தை

டோக்கியோ, செப். 23

ஜப்பானில் அதிவேகத்தில் பறக்கும் ரயில் நிறுத்தப்பட்டு, தண்டவாளத்தின் குறுக்கே நின்று கொண்டிருந்த பெண் குழந்தையொன்று சாதுரியமாகக் காப் பாற்றப்பட்டது.

ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் சுசாக நகரப் பகுதியில் அதிவேக பறக்கும் ரயில் சென்றுகொண்டிருந்தது. அப்போது தண்டவாளத்தின் குறுக்கே தத்தித் தவழ்ந்து நடைபயிலும் ஒரு பெண் குழந்தை நின்றுகொண்டிருந்தது.

குழந்தை நிற்பதை ரயில் சாரதி பார்த்துவிட்டார். உடனே இரக்க மனம் படைத்த அவர் மெதுவாக ரயில் என்ஜினின் வேகத்தை குறைத்தார். பின்னர் தண்டவாளத்தில் நின்றிருந்த குழந்தையின் அருகே 50 சென்டி மீற்றர் இடைவெளியில் அந்த ரயிலை நிறுத்தினார். இதனால் அந்த ரயில் மோதாமல் அக்குழந்தை உயிர் தப்பியது.

இது மிகவும் ஆச்சரியப்படத்தக்க சாதுரியம் என அந்த சாரதியைப் பயணிகள் பாராட்டினர். விசாரணையில் பறக்கும் ரயிலை நிறுத்திய அக்குழந்தை, வீட்டிலிருந்து காணாமல் போயிருந்தமை தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் மீதான கொடுமைகளை இந்திய அரசு தட்டிக்கேட்க வேண்டும்

## ஜெயலலிதா வலியுறுத்துகிறார்



சென்னை, செப். 23

இலங்கையில் நடைபெறும் தமிழர்கள் மீதான கொடுமையை இந்திய அரசு தட்டிக் கேட்க வேண்டும். அங்குள்ள தமிழர்களை கௌரவத்துடன் நடத்த இலங்கை அரசை நிர்பந்திக்கும் வகையில் இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர்கள் இலங்கை இராணுவத்தினரால் கொடூரமான முறையில் நடத்தப்படுவது தொடர்பாக இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பப்பட்ட காட்சிகள் மிகவும் கவலை அளிப்பதாக உள்ளன. இந்தக் காட்சிகள் இந்தியத் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகியும், சில புகைப் படங்கள் பெரும்பாலான பத்திரிகைகளில் வெளியிடப்பட்டும், இலங்கை அரசுக்கு மத்திய அரசும் மாநில அரசும் தங்களது எதிர்பபைத் தெரிவிக்கவில்லை.

தீவிரவாதத்திற்கோ அல்லது தீவிரவாத அமைப்புகளுக்கோ ஆதரவாக அ.தி.மு.க. ஒருபோதும் இருந்ததில்லை. தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவது என்ற பாதையிலிருந்து விலகி, தீவிரவாத இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்றைக்கு மாறியதோ, அன்றிலிருந்து இந்த இயக்கத்தை நான் தொடர்ந்து கடுமையாக விமர்சித்து வருகிறேன்.

இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என ஒளிபரப்பப்படும் காட்சிகளில் வருபவர்கள் விடுதலைப் புலிகளாக இருந்தாலும், வழக்கு விசாரணையே இல்லாமல் அனைவரையும் சுட்டுக்கொல்வது என்பது மனிதத் தன்மை அற்றது. போரின் போது சிறைபிடிக்கப்பட்டவர்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்ற சர்வதேச சட்டத்தை மீறுவதாக அமைந்துள்ளது.

இலங்கையில் நடைபெறும் தமிழர்கள் மீதான கொடுமையை இந்திய அரசு தட்டிக் கேட்க வேண்டும். இலங்கை அரசின் மனித உரிமை மீறலை சர்வதேச அமைப்புகளில் எழுப்பி, அங்குள்ள தமிழர்களை கௌரவத்துடன் நடத்த இலங்கை அரசை நிர்ப்பந்திக்கும் வகையில் இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையெனில், உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில், இலங்கையில் நடைபெறும் கொடூரமான மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அ.தி.மு.க. ஒத்த கட்சிகளுடன் இணைந்து போராட்டம் நடத்தும் சூழல் ஏற்படும் - என்றுள்ளது.

## நவராத்திரி விழா: தாக்குதல்நடத்த தீவிரவாதிகள் சதி

கொல்கத்தா, செப். 23

நவராத்திரி விழாவின்போது ரயில்களை குண்டுவைத்து தகர்க்க தீவிரவாதிகள் சதி திட்டம் தீட்டி இருக்கின்றனர் என மத்திய உள்துறைக்கு ரகசியத் தகவல் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி கொல்கத்தாவில் மேற்கு வங்க அரசு தலைமைச் செயலாளர் அசோக் மோகன் சக்கரவர்த்தி கூறியவை வருமாறு -

நவராத்திரி விழா தொடங்கி உள்ளது. மேற்கு வங்கத்தில் துர்கா பூஜை விழாவும் நடக்கிறது. இந்த விழாக் காலத்தின்போது ரயில்களைத் தகர்க்க தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டி இருக்கின்றனர் என மத்திய உள்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனால், உஷாராக இருக்கும்படி மேற்கு வங்க அரசுக்கு மத்திய உள்துறை தகவல் அனுப்பியுள்ளது - என்றார்.

# மீள்குடியமர்வை இலங்கையின் உள்விவகாரமென விட்டுவிட இந்தியா ஒருபோதும் தயாராக இல்லை

## கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, செப். 23

இலங்கைத் தமிழர்களை மீள்குடியமர்த்துவதும் மறுவாழ்வு அளிப்பதும் இலங்கையின் உள்விவகாரம் என்று விட்டு விட இந்தியா தயாராக இல்லை - என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து, கடந்த திங்கட்கிழமை அவர் வெளியிட்டுள்ள கேள்வி - பதில் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக நான் கடிதம் எழுதினேன். இதோடு நிற்காமல் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் பிரதமரையும், சோனியா காந்தியையும் சந்தித்து நமது கோரிக்கையை விளக்க உள்ளனர்.

மத்திய, மாநில அரசுகள் இந்த அளவுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் செயற்பட்டு வந்த போதிலும், இங்கேயுள்ள ஒரு சிலர் திரும்பத் திரும்ப மத்திய, மாநில அரசுகளை குறை சொல்லிக் கொண்டே காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.



இலங்கைப் பிரச்சினை தொடர்பாக நான் எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து, மத்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளது எனச் செய்தி வந்துள்ளது.


இலங்கைத் தமிழர்களை மீள்குடியமர்த்துவதும் மறுவாழ்வு அளிப்பதும் இலங்கையின் உள்விவகாரம் என்று விட்டு விட இந்தியா தயாராக இல்லை.

தமிழக மக்களும் அரசும் தரும் அழுத்தத்துக்கு இந்திய அரசும் அதன் மூலம் இலங்கை அரசும் கட்டுப்பட்டவையே என்பதை பத்திரிகைச் செய்தி படம் பிடித்துக் காட்டுகிறது.

மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் அளித்த கடிதத்தைப் பெற்றுக் கொண்ட பிரதமர், தேசிய பாதுகாப்பு ஆலோசகரை அழைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்தியாவின் உணர்வுகளை அப்படியே தெரிவிக்குமாறு கூறியிருந்தார். அதன் விளைவாக இலங்கை அரசின் அதிகாரிகள் அவசரமாகக் கூடி தமிழர்களின் மறுவாழ்வு தொடர்பான நடவடிக்கைகள் எந்த நிலையில் இருக்கின்றன என ஆய்வு செய்தனர் - என்றுள்ளது.

# முகாமிலுள்ள ஈழத் தமிழரை விடுவிக்காவிடின் இலங்கை மீது சர்வதேசத்தின் தடை வேண்டும்!

## ஐ.நாவில் தீர்மானம் கொண்டுவர இந்தியாவிடம் நெடுமாறன் வலியுறுத்து



சென்னை, செப்.23

முகாம்களில் உள்ள தமிழர்களை உடனடியாக விடுதலை செய்யாவிட்டால், இலங்கை மீது உலக நாடுகள் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஐ.நாவில் இந்திய அரசு கொண்டு வரவேண்டும் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

அகதி முகாம்களில் வதைபடும் 3 லட்சம் இலங்கைத் தமிழர்களைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் 'உயிருக்கு ஆபத்து' என்று ஓலமிடும் முதல்வர் கருணாநிதியின் செயலால் உலகத் தமிழர்கள் வேதனை அடைந்துள்ளனர்.

அதனை சுட்டிக்காட்டியதற்காக என் மீது பாய்கிறார். குண்டர் சட்டத்தைக் காட்டி மிரட்டுகிறார். தமிழர்களின் வெறுப்புக்கும், கோபத்துக்கும் ஆளாகும் போதெல்லாம் தனது உயிருக்கு ஆபத்து என்று கூக்குரல் எழுப்பி பிரச்சினையை திசைதிருப்ப முயல்வது முதல்வர் கருணாநிதிக்கு கைவந்த கலையாகும்.

இதுபோன்ற நாடகங்களை எல்லாம் நிறுத்திவிட்டு முகாம்களில் உள்ள தமிழர்களை மீட்பதற்கு உண்மையான நடவடிக்கைகளை முதல்வர் மேற்கொள்ள வேண்டும்.

முள்வேலி முகாம்களில் வதைப்படும் தமிழர்களை மீட்க உருப்படியாக எதுவும் செய்யாமல் கண்துடைப்பு முயற்சிகளில் பிரதமர் மன்மோகன் சிங்கும், முதல்வர் கருணாநிதியும் தொடர்ந்து ஈடுபட்டு வருவது கண்டிக்கத்தக்கது.

ஐ.நா. அதிகாரி லியன் பாஸ்கோ அகதி முகாம்களை நேரில் பார்வையிட்டு உண்மைகளை அம்பலப்படுத்தியுள்ளார். ஆனால் முதல்வர் கருணாநிதி டில்லிக்கு கடிதம் எழுதுவதும், பிரதமர் சார்பில் அதிகாரிகள் இலங்கை ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதுவதுமான நாடகம் தொடர்கிறதே தவிர ஈழத் தமிழர்களுக்கு விடிவுகாலம் பிறக்கவில்லை.

முகாம்களில் உள்ள தமிழர்களை உடனடியாக விடுதலை செய்யாவிட்டால், இலங்கை மீது உலக நாடுகள் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஐ.நாவில் இந்திய அரசு கொண்டு வரவேண்டும். அப்போதுதான் இந்திய அரசின் மீது தமிழர்களுக்கு நம்பிக்கை பிறக்கும் - என்றுள்ளது.

## பன்றிக்காய்ச்சல் பலி: 247

பன்றிக்காய்ச்சலால் நேற்றுமுன்தினம் மேலும் 8 பேர் பலியாகினர். இதன் மூலம், இந்தியாவில் இதுவரை இந்த நோயால் பலியானோர் எண்ணிக்கை 247 ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து மத்திய சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியவை வருமாறு -

பன்றிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 8 பேர் நேற்றுமுன்தினம் பலியாகினர். மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் குஜராத்தில் தலா 2 பேர் இறந்தனர். இதன் மூலம், இந்தியாவில் இந்த நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை 247 ஆக உயர்ந்தது. நேற்றுமுன்தினம் புதிதாக 253 பேர் இந்த நோயால் தாக்கப்பட்டு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது - என்றனர்.


## A professional career guidance seminar towards a Bright Future for Jaffna Students in Tamil



The Undergraduate Department of Jaffna College in collaboration with the Institute of Chartered Accountants will launch up a seminar at the above topic at the **Undergraduate Department**, 464, Hospital Road, Jaffna at **26th (Saturday) September 2009** at 9 a.m

9.00 - 9.30 - Welcome & Inaugural Address
9.30 - 10.30 - Introduction to soft skills components
**Dr.T.Kalamani**, Senior Lecturer, Faculty of Education, University of Jaffna.
10.30 - 11.30 - Conflict Management
**Mr.B.Thanabalan**, Senior Lecturer, National College of Education, Jaffna
11.30 - 12.30 - Career Guidance
**Mr.S.Elangovan**, Institute of Chartered Accountants of Sri Lanka.
12.30 - 1.00 - Question Time
1.00 - 1.15 - Vote of Thanks

Refreshments will be served. Present students in Advanced Level classes, students who have sat for August 2009 A/L exam batch and all others interested in upgrading your career with the Institute of Chartered Accountants are cordially invited for this seminar.

Hope you make use of this golden opportunity available at your door step.

Further Details
**Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Road, Jaffna.

Director


## மரண அறிவித்தல்

### கனகசபாபதி கேமநாத்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கேமா என்று அன்பாக அழைக்கப்பட்ட கனகசபாபதி கேமநாத் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி -வல்லாம்பிகை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் கலாராணி, பிரதாபன், நிமல்தாஸ், கமல்தாஸ், சுணில்தாஸ், எழிலரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனபாலசிங்கம், ரதி, சைலஜா, ஹரிச்சந்திரா, தர்மேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம், சீவரத்தினம், மகாலிங்கம், பரமநாதன் மற்றும் சுந்தரலிங்கம் திலகேஸ்வரி, ராசமணி, ஜெயலச்சுமி, புஸ்பவதி ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற ஸ்ரீதாம்பாள் மற்றும் மகாதேவன் ஆகியோரின் மருமகனும் ஜெயபாலன் (முகாமையாளர், வர்த்தகவங்கி, வவுனியா), ஷர்மிலா, மருதலிங்கம் ஆகியோரின் உடன்பிறவாத சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2009) புதன்கிழமை பி.ப 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

21/12 [illegible] அரசிமார் கோவில் முன் வீதி,
அரியாலை.

நகவல்: தனபாலசிங்கம் கலாராணி
(சகோதரி),
மருதலிங்கம் ஷர்மிலா (உடன் பிறவாத சகோதரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் சர்வதேச சமாதான தினம் கைதடி மேற்கு, சரஸ்வதி சனசமூக முன்றலில் நேற்றுமுன்தினம் சமாதான விழாவை நடத்திய போது எடுக்கப்பட்ட படங்கள். தேசிய சமாதான பேரவை தேசிய பணிப்பாளர் ஜெகான் பெரேரா வல்முகப்பத்தன பிரிய தர்சன தேரர் மற்றும் இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ மனோகரக் குருக்கள், நல்லை ஆதீனத்தின் சார்பில் இராசையா ஸ்ரீதரன், அருட்திரு. யே.பி.அன்ரனிதாஸ் அடிகள், அமல மரித்தியாகிகள் மாகாண முதன்மை ஆலோசகர் அருட்பணி எப்.எல்.என்.குருஸ் அடிகள் வரவேற்கப்படுவதையும் தேசிய சமாதானப் பேரவையின் தேசியப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா, பணிப்பாளர் வண.வல்முவபத்தன பிரியதர்சன தேரர் ஆகியோருக்கு சிறுவர்கள் சமாதானத் தீபங்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்- வன்னை செய்தியாளர்)

# மிருசுவில் நலன்புரி நிலையத்திலும் நேற்று பாடசாலை திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 23

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து அழைத்து வரப்பட்டு மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப் பட்டுள்ள மாணவர்கள் நேற்று நலன்புரி நிலையப் பாடசாலைகளில் இணைக்கப் பட்டனர்.

கற்றல் உபகரணங்கள், பாட நூல்கள், சீருடைகள் ஆகியவை இல்லாத நிலையில் பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ள 300 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு தென்மராட்சி கல்வி வலயத்தினால் இந்திய அரசு வழங்கிய சீருடைத் துணிகள் விநியோகிக்கப்பட்டன.

இந்தச் சீருடைகள் தைப்பதற்கான கூலியினை வழங்க யேசுசபை அகதிகள் பணி நிறுவனத்தினர் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

# மாத்தளையில் ஹொக்கி சுற்றுப் போட்டி; பங்கேற்க யாழ். அணி இன்று புறப்படுகிறது

யாழ்ப்பாணம் செப்.23

இலங்கை ஹொக்கிச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மாத்தளையில் நாளைமுதல் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ள தேசிய கொக்கி சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் பங்குபற்ற இருக்கின்றது.

இந்த அணிவீரர்கள் இன்று மாத்தளைக்குப் புறப்படவிருக்கிறார்கள். இந்தப் போட்டியில் பங்குபற்றவிருக் கும் அணி வீரர்களின் விவரங்கள் அறிவிக் கப்பட்டுள்ளன.



நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)ஆர்.சஜீவன், பி. ஜெயராஜ், ரி. லக்ஸ் மன், வி.நேசரூபன், எஸ், நிஷாந் தன், என்.ஜெனார்த் தனன், என். வசீக ரன், எஸ். சுகிர்தன், எஸ்.சுரேந்தர், இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)ஜீ.டி. மதியழகன் (பயிற்றுநர்), எம். ஜே. இதயகுமார், எஸ்.றஜீவன், ஆர். குகன் (அணித்தலைவர்), ஆர். இராஜேஸ் வரன் (அணி உப தலைவர்), ஆர்.கே. சாம்சன், ஆர்.பாலு, என்.துஷ்யந்தன் (தலைவர் - யாழ்.மாவட்ட ஹொக்கி சங்கம்).

# மஹிந்தவுக்கு எதிரான கூட்டணியில் 15 கட்சிகள், பொது அமைப்புகள்

கொழும்பு,செப்.23

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கின்றமையை நோக்கமாகக்கொண்டு அமைக்கப்பட இருக்கும் எதிர்க்கட்சிகளின் உத்தேச கூட்டணியில் 15 இற்கும் அதிகமான கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் இணைந்து கொள்ளும் என்று ஐ.தே.க. நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் உத்தேச கூட்டணியை அமைப்பது தொடர்பாக சுமார் ஐந்து கட்சிகள் ஐ.தே.கவுடன் ஆரம்பத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்ளும். நாளடைவில் 15 இற்கும் அதிகமான கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் இக்கூட்டமைப்பில் இணையும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

இக்கூட்டமைப்புக்குத் தலைவராக ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே இருப்பார் என்றும் அக்கட்சி கூறியது.(அ-சி)

# இந்திய மீனவர்கள் 21 பேரையும் விடுவிக்க இலங்கை இணக்கம்

கொழும்பு, செப். 23

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்கள் 21 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்று இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா 'ஏசியன் ரிபியூன்' இணையத்தள பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்துக் கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த வாரம் இந்திய மீனவர்கள் இரு வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இம் மீனவர்களை இலங்கை விடுதலை செய்யவேண்டும் என்று இந்திய அரசு திரும்பத் திரும்பக் கோரிக்கை விடுத்து வருகிறது.

இந்நிலையிலேயே இந்திய மீனவர்கள் 21 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்படுவர் என்று இலங்கையின் மீன்பிடித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நெருக்கமான முக்கியத்துவம் கருதியே இந்த மீனவர்களை விடுவிக்க இலங்கை தீர்மானித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கடலில் தாக்கப்பட்டு வருகிறார் கள் என்ற குற்றச்சாட்டை அவர் முற்றாக நிராகரித்தார். (அ-சி)

# விளையாட்டு விற்பன்னர் கப்டன் டி.ஏ.குணசிங்கம் 81 ஆவது வயதில் காலமானார்



யாழ்ப்பாணம், செப்.23

விளையாட்டுத்துறையில் பெரிதும் அறியப்பட்ட விற்பன்னர் கப்டன் டி.ஏ. குணசிங்கம் தமது 81 ஆவது வயதில் கடந்த வார இறுதியில் மரணமானார்.

இவர் பலதுறை விளையாட்டு வீரனாவார். யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றியவர். அந்தச் சங்கத்தை இலங்கை கரப்பந்தாட்ட சங்கத்தில் இணைப்பதற்கு அரும்பணி ஆற்றியவர். யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவராகவும் செயளாலராகவும் பணி புரிந்தார்.

ஈச்சமோட்டையைச் சேர்ந்த இவர் விளையாட்டுச் சங்கங்களின் அலுவலகங்கள் இயங்குவதற்கு தமது வீட்டை வழங்கி ஊக்குவித்தவர்.

விளையாட்டுத் துறையில் மட்டுமன்றி சமூக சேவைகளிலும் ஈடுபட்டு பெரும் தொண்டாற்றினார். இவர் சமாதான நீதிவானுமாவார். இவர் விளையாட்டுத் துறையின் மூத்த செய்தியாளராகவும் விளங்கினார். வனபரிபாலனத் துறையில் கடமை யாற்றிய இவர் இலங்கை இராணுவத் தொண டர் படையில் கப்டனாகவும் பதவி வகித்தவர்.

அவரது இறுதிக்கிரியைகள் இவ்வார இறுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. (அ-86)

# நவீன முன்பள்ளிப் பாடசாலையை யாழ்ப்பாணத்தில் அமைக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸுடன் நேற்று ஆராய்வு

யாழ்ப்பாணம் செப்.23

சிறுவர் முன்பள்ளி நவீன மாதிரிப்பாடசாலை ஒன்றை யாழ். நகரில் அமைப்பதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு சிறுவர் அபிவிருத்தி மகளிர் மேம்பாட்டு அமைச்சு அதிகாரிகளும் ஹேமாஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்று முற்பகல் அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப் பின் போது சிறுவர் முன்பள்ளி நவீன மாதிரிப் பாடசாலையைநிர்மாணிப்பதற்குத் தேவையான இட ஒதுக்கீடு உட்படப் பல் வேறு வசதிகளை வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்ட சமயம், தேவையான உதவிகளை வழங்குவதற்கு யாழ்.மாநகர சபை தயாராக உள்ளதாக மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராஜா தெரிவித்தார்.

இதேவேளை இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கும் அதனைத் திறம்பட நிர்வகிப்பதற்கும் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ள நிலையில் சிறுவர் அபிவிருத்தி மகளிர் மேம்பாட்டு அமைச்சு, ஹேமாஸ் நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டதுடன் அமைச்சரினதும் யாழ் மாநகர முதல்வரினதும் ஒத்துழைப்பிற்குத் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

வடமாகாண முன்பள்ளிப் பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச் சந்திப்பில் யாழ்.மாநகர முதல் வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்த குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (1)

# இலங்கை தமிழர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலன்டேவிட் ஆகியோர் சென்றிருந்தனர். விடுதலை சிறுத்தைகள் சார்பில் தொல். திருமாவளவன் எம்.பி. சென்றார்.

மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தலைமையில் தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, ஜி.கே.வாசன், ஜெயந்தி நடராஜன், சித்தன், மாணிக்தாகூர், சுதர்சன நாச்சியப்பன், கிருஷ்ணசாமி ஆகியோர் சென்றிருந்தனர். 10.15 மணி முதல் 10.45 மணி வரை சுமார் 30 நிமிடம் பிரதமருடன் தமிழக எம்.பி.க்கள் பேசினார்கள்.

அப்போது முதலமைச்சர் கருணாநிதி சார்பில் கோரிக்கை மனு ஒன்றைப் பிரதமரிடம் தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் கொடுத்தனர்.

அந்த மனுவில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையில் போர் முடிந்த பிறகும் ஈழத்தமிழர்கள் தடுப்பு முகாம்களில் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் அவரவர் வீடுகளுக்கு உடனடியாகத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக மழைகாலம் தொடங்கும் முன்பு தமிழர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று இலங்கையை இந்தியா வலியுறுத்த வேண்டும்.

தமிழ் நாட்டில் இருந்து எம்.பிக்கள் குழுவை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்

இலங்கையில் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் ஈழத்தமிழர்களின் உண்மை நிலை என்ன என்பதை அறிந்து கொள்ள உலகத் தமிழர்கள் எதிர்பார்ப்புடன் உள்ளனர். எனவே ஈழத்தமிழரின் உண்மை நிலையை அறிய தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு எம்.பி.க்கள் குழுவை அனுப்பவேண்டும். அந்தக் குழு தடுப்பு முகாம்களுக்குச் சென்று உண்மையை அறிந்துகொள்ள வேண்டும். இந்தக் குழுவின் பயணத்துக்கான ஏற்பாடுகளை மத்திய அரசு விரைவில் செய்து தரவேண்டும்- என்று உள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு உதவி செய்ய தமிழக அரசு சார்பில் பல கட்டங்களாக நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த நிவாரணப் பொருள்கள் உரிய முறையில் ஈழத் தமிழர்களின் கைகளில் சென்று சேர்ந்ததா என்பதை அறிய மத்திய அரசு விசாரிக்க வேண்டும் என்று பிரதமரிடம் தமிழக எம்.பி.க்கள் கேட்டுக் கொண்டனர். இது தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்று தர வேண்டும் என்றும் எம்.பி.க்கள் கோரிக்கை விடுத்தனர்.

எம்.பி.க்களின் கோரிக்கைகளை பிரதமர் மன்மோகன்சிங் கவனமாகக் கேட்டுக்கொண்டார். பிறகு அவர் ஈழத்தமிழர்களுக்கு உதவ எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று உறுதிய ளித்தார். பிரதமர் அங்கு கூறியவை வருமாறு:-

ஈழத் தமிழர்களுக்கு உதவும் விடயத்தில் இந்தியா தரப்பில் உண்மையான, ஆக்கப்பூர்வமான பணிகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எதிர்காலத்திலும் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த விடயத்தில் இந்தியா ஒரு போதும் தயங்காது-என்றார்.

பிரதமரைச் சந்தித்த பின்னர் தமிழக எம்.பிக்கள் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை அவரது வீட்டில் சந்தித்துப் பேசினார்கள்.

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சோனியாவிடம் வற்புறுத்தினார்கள். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுக்கொள்கைக்கான நிலையப் பணிப்பாளர் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் விசாரணை

## ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் நடவடிக்கை



கொழும்பு, செப். 23 மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பாக்கியஜோதி சரவணமுத்து நேற்று இரண்டரை மணித்தியாலங்கள் வரை கொழும்புக் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பாக்கியஜோதி சரவணமுத்து தமக்கு இனந்தெரியாதோரால் கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸில் முன்னர் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாக்கியஜோதி சரவணமுத்துக்கு விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தல் குறித்து உடனடியாக புலனாய்வு விசாரணை நடத்தி தமக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதன் பின்னணியிலிலேயே மேற்படி கொலை அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பாக கொழும்புக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் பாக்கியஜோதி சரவணமுத்திடம் இரண்டரை மணி நேரம் விசாரணை நடத்தினர் எனத் தெரியவருகிறது.

அவர்கள் 12 பக்கங்கள் கொண்ட வாக்குமூலத்தையும் பதிவு செய்தனர் என்றும் கூறப்பட்டது. பாக்கியஜோதி சரவணமுத்து ஆரம்பத்தில் 21 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராக வேண்டும் எனக் கேட்கப்பட்டிருந்தார்.

அப்போது அவர் அங்கு சென்ற போது அவருடைய வாக்குமூலத்தை ஆங்கிலத்தில் பதிவு செய்யக்கூடிய உத்தியோகத்தர்கள் அங்கு இருக்கவில்லை. எனவேதான் அவர் நேற்றைய தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வந்து வாக்குமூலம் அளிக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டார்.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்காத பட்சத்தில் பாக்கியஜோதி சரவணமுத்து படுகொலை செய்யப்படுவார் என்று அவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

(அ-சி)

## அனைவருக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது புரட்சிகரமான வகையில் அபிவிருத்தி இடம்பெற்று வருகின்றது. பாடசாலைகள், பெருந்தெருக்கள், மின்விநியோகம், சுகாதாரம், போக்குவரத்து என பல துறைகளிலும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்வி மட்டும் இருந்தால் போதாது. நற்குணம் நற்பண்பு மனிதாபிமானம் போன்றவையும் அவசியமானதாகும். இந்தத் தாய் நாட்டை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். அதற்கான உங்கள் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றுங்கள். அறிவுபூர்வமாகச் செயற்பட்டு நாட்டுப் பிரஜைகள் அனைவருக்கும் பாதுகாப்பும் சுதந்திரமும் கொண்ட ஒரு சூழலை உருவாக்குவோம் - என்று ஜனாதிபதி கூறினார்.

அங்கு ஜனாதிபதி தமிழிலும் உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட பல பிரமுகர்களுடன் பெரும் திரளானவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அகதிமுகாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசுக்கு எதிராக மாநாடு, ஆர்ப்பாட்டம், பேரணி ஆகியவற்றை நடத்தின.

இலங்கையில் முள்வேலிக்குள் அடைத்து வைத்துள்ள மூன்று லட்சம் தமிழர்களை விடுவித்து புனர்வாழ்வு அளிக்கக்கோரியும், தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக் கொன்றும், பிடித்துச் சென்றும் கூட இந்திய அரசு மௌனம் காத்து வருவதற்கு கண்டனம் தெரிவித்தும் பேரணி நடைபெற்றது.

பின்பு, இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் ஜனாதிபதி மாளிகையில் மனு ஒன்றை அளித்தார். அந்த மனுவில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

தமிழகத்தைச் சேர்ந்த ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை இலங்கை இராணுவம் தாக்கியுள்ளது. பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சொந்த நாட்டு கடல் பகுதியில் கூட மீன் பிடிக்க முடியாத அவலநிலையில் தமிழக மீனவர்கள் உள்ளனர். இந்தியக் கடற்படையும் தமிழக மீனவர்களுக்கு எவ்வித பாதுகாப்பையும் தரவில்லை.

எனவே, கச்சதீவு ஒப்பந்தத்தை உடனடியாக ரத்துச் செய்யவேண்டும். இந்தியாவின் எதிரி நாடுகளான சீனா, பாகிஸ்தான் போன்றவற்றுடன் இலங்கை அரசு நெருக்கம் காட்டுகிறது. எனவே, இந்த விடயத்தில் மத்திய அரசு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-சி)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய தகவலையடுத்து தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் 3 அங்கிகளும் வெடிபொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காட்டுப்பகுதி ஒன்றில் இவை ஒளித்து வைக்கப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகத்தின் பேரில் இளம்பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டபோது, அவருடன் இருந்தார் எனத் தெரிவிக்கப்படும் மற்றுமொரு இளம் பெண் சைனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களாக இருக்கலாம் எனப் பொலிஸ் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)

## அகதிகளின் மீள்குடி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் யுத்தக் குற்றங்களுக்கான விசேட தூதுவர் ஸ்டீபன் ரப், குறிப்பிட்ட விசேட அறிக்கையை காங்கிரஸிடம் சமர்ப்பித்துள்ளமையை அமெரிக்க வெளிவிவகார அமைச்சகப் பேச்சாளர் இயன் கெலி உறுதி செய்துள்ளார்.

எனினும் தன்னிடம் இது குறித்த மேலதிக விவரங்கள் இல்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, இலங்கையில் சனநெரிசல் அதிகமாகவுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்கள் குறித்து மீண்டும் கவலை வெளியிட்டுள்ள அமெரிக்கா, மக்கள் தொடர்ந்தும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அவர்களை விசாரணை செய்வதையும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதையும் துரிதப்படுத்துமாறு கோரியுள்ளது.

மத்திய மற்றும் தென்னாசியாவுக்கான அமெரிக்காவின் உதவி வெளிவிவகார அமைச்சர் ரொபேட் ஓ பிளேக் செய்தியாளர்களுக்கு நியூயோர்க்கில் கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முகாம்களில் இன்னமும் உள்ள 3 லட்சம் மக்கள் குறித்து அமெரிக்கா கவலையடைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

''மூன்று மாதங்களுக்கு மேலாக அவர்கள் அங்கு உள்ளனர். செப்ரெம்பரின் இறுதியில் பருவப்பெயர்ச்சி மழை காலம் ஆரம்பமாகவுள்ளதால் நாங்கள் இது குறித்து விசேடமாகக் கவலை கொண்டுள்ளோம்'' என பிளேக் தெரிவித்தார்.

**சர்வதேச சமூகத்தில் பொதுக் கருத்து**

முகாம்களில் அதிகளவானவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள பாரிய பிரச்சினை இன்னமும் காணப்படுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்களில் முன்னேற்றம் காணுமாறு இலங்கைக்கு வலியுறுத்த வேண்டும் என்பது குறித்து சர்வதேச சமூகத்தின் மத்தியில் பொதுக்கருத்துக் காணப்படுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியல் நல்லிணக்கத்தைக் காணும் முயற்சிக்கு அகதிகள் விடயம் முக்கியமானது என்பதையும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

''இடம்பெயர்ந்த மக்களை எவ்வளவு காலத்துக்கு நீங்கள் இவ்வாறான சூழ்நிலைகளில் வைத்திருக்கிறீர்களோ, அவ்வளவிற்கு இது பிரச்சினைகளை உருவாக்கும். ஆகவே, அவர்களை விடுவிப்பது முக்கியமானது'' என்று ரொபேர்ட் ஓ பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் நிலக்கண்ணி வெடிகளைப் பெருமளவு அகற்றவேண்டியுள்ளதால், உடனடியாக இடம்யெர்ந்த மக்கள் அனைவரையும் மீள்குடியமர்த்துவது சாத்தியமில்லை என்பதை ரொபேர்ட் ஓ பிளேக் ஏற்றுக்கொண்டுள்ளார்.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் நடைபெறும் அதேவேளை, இடம்பெயர்ந்தவர்களுக்கு வேறு வழிகள் உள்ளன. அவர்கள் தெற்கில் உள்ள தமது உறவினர்களுடன் தங்கியிருக்க விரும்பலாம் அல்லது அவர்கள் முகாம்களிலேயே தங்கியிருக்க விரும்பலாம். எவ்வாறு இருந்தாலும் நடமாட்ட சுதந்திரம் என்ற கொள்கை உலகின் ஏனைய பகுதிகளைப் போல இலங்கையிலும் மதிக்கப்பட வேண்டும்'' என அவர் கேட்டுள்ளார்.

இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் உள்ள விடுதலைப் புலிகளை இனம் காணும் நடவடிக்கை மக்கள் முகாமிற்கு வந்து சேர்ந்த தருணத்திலிருந்து இடம்பெறுகின்றது. அதனைத் துரிதப் படுத்தி மக்களை இப்போதைய மோசமான நிலையிலிருந்து விடுவிக்க வேண்டும்.

## வன்னி முகாம்களில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது தொடர்பாக அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆயிரம் புலிகளே இருக்கின்றனர் என்று அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சொன்னார். பின்னர் அந்த வருடம் செப்ரெம்பரில் 16 ஆயிரம் புலிகள் கொல்லப்பட்டுவிட்டனர் என்றும் மேலும் 4 ஆயிரம் புலிகள் உயிரோடு உள்ளனர் என்றும் அவர் கூறினார். ஆனால் பின்னர் 2009 மே மாதம் யுத்தம் முடிவடைந்ததோடு மேலும் ஆயிரக்கணக்கான புலிகள் கொல்லப்பட்டனர். இராணுவத்தரப்பில் கூறப்பட்டுள்ளத. ஆனால் இப்போது இன்னமும் 20 ஆயிரம் புலிகள் அகதி முகாம்களில் உள்ளனர் என்று அரசு சொல்கிறது.

எனவே பாதுகாப்பு அமைச்சின் தேவைக்கு ஏற்ப புலிகளின் எண்ணிக்கை மாறுபடுகின்றது. இவ்வாறு இன்னும் 20 ஆயிரம் புலிகள் உள்ளனர் என்று கூறிக்கொண்டு அகதி முகாம்களில் இருந்து தினமும் 30 - 40 பேர் கடத்தப்படுகின்றனர் அல்லது கைது செய்யப்படுகின்றனர் என்று கூறினார். (அ-சி)

## இலங்கை.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சி முன்னெடுக்கும் சதியின் ஒரு பகுதி இதுவென தெரிவிக்கப்படுகின்றது.

அரசின் ஸ்திரத்தன்மைக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் சதியே இதுவென ஜனாதிபதி கவலையடைந்துள்ளார் என்றால், அவர் இதனை ஐக்கிய நாடுகள்சபையில் முறியடித்திருக்கவேண்டும்: அம்பலப்படுத்தியிருக்கவேண்டும்.

இதனை செய்வதற்கு ஐ.நாவே சிறந்த பொருத்தமான இடம். ஆனால், ஜனாதிபதியோ அழைப்பை ஏற்று நியூயோர்க் சென்று சர்வதேச கூட்டத்தொடரில் உரையாற்றாமல், இதற்குப் பதில் பாடசாலை சிறுவர்களையும், கிராமசேவையாளர்களையும், மருத்துவர்களையும் அலரி மாளிகைக்கு அழைத்து சர்வதேச சதி என அலறுகின்றார். இதனால் சதிகாரர்களை கண்டுபிடிக்க முடியுமா? முறியடிக்க முடியுமா?

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவிருந்த வேளை, யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் ஐ.நாவிற்குச் சென்று உரையாற்றினார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் ஆழிப்பேரலை குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் உரை யாற்றினார்.

ஜனாதிபதி மேற்குலக நாடுகளை சதிகாரர் என்கிறார். எனினும், அவர்களை சந்திக்க தயங்குகிறார்; அஞ்சுகிறார்.

நாடொன்றின் தலைவர் இவ்வாறு தானா நடந்து கொள்ள வேண்டும்.

யுத்தத்திற்குப் பின்னர் தன்னை சர்வதேச சண்டியராகக் காண்பிக்க முயலும் ஆசையில் ஜனாதிபதி தனது தேசக்.கடமைகளை கைவிடுகிறார்.

சர்வதேச இராஜதந்திர உறவுகள் சீர்குலைந்து வருகின்றன. பொருளாதாரம் வீழ்ச்சியடைகின்றது. முழு நாட்டினதும் அபிவிருத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தருணத்தில் இராஜதந்திர ரீதியில் விவேகத்துடன் செயற்பட்வேண்டும்.

தனது நாட்டின் நலன் குறித்து சிந்திக்கும் தலைவர் ஒருவர் தனக்கு உதவிய - எப்போதும் உதவக்கூடிய உலகிற்கு தன்னை சண்டியராகக் காண்பிக்க முயலமாட்டார்.

மேற்குலகை எதிர்த்த கியுபாவின் தலைவர் பிடல் காஸ்ட்ரோ கூட ஐ.நா. கூட்டத் தொடரில் கலந்துகொண்டுள்ளார்.

நாட்டின் பிரச்சினைகள் குறித்த விவாதித்து தீர்வு காண்பதற்கான சிறந்த இடம் அதுவென்பதாலேயே அவர் அங்கு சென்றுள்ளார் - என்றார். (அ-சி)

## யாழ்ப்பாணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளொன்றிற்கு 300 அல்லது 500 பிரயாணிகளுக்கான அனுமதி வழங்கப்படுவதால், அவற்றைப் பெறுவதற்காகப் பயணிகள் இரவிலேயே அந்த அலுவலகத்தின் முன்னால் வரிசையில் காத்து நிற்கும் நிலையில் இந்த இட மாற்றம் பல சிரமங்களை பயணிகளுக்கு ஏற்படுத்தியி ருக்கிறது.

கொழும்பில் இருந்து இரவு தபால் ரயிலில் வருகின்ற பயணிகள் வவுனியா ரயில் நிலையத்தில் இறங்கி காலையிலேயே ரம்யா ஹவுஸ் இராணுவ சிவில் அலுவலகத்திற்கு சென்று பாஸ் பெற்று பிரயாணத்தை மேற்கொண்டு வந்தார்கள்.

தற்போது இந்த அலுவலகம் ஈரப்பெரியகுளத்திற்கு மாற்றப்பட்டிருப்பதால், வவுனியா நகரில் இருந்து, மூட்டை முடிச்சுகளுடன் அங்கு செல்வதற்கு ஓட்டோவுக்கான கட்டணமாக 350 ரூபாவிலிருந்து 500 ரூபா வரையில் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது என்றும் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன், காலையில் இருந்து பிற்பகல் அல்லது மாலையில் யாழ்ப்பாணத்தை நோக்கி பஸ்கள் புறப்படும் வரையில் இந்த அலுவலகத்திற்கு முன்னால் காத்துநிற்க நேரிட்டுள்ளதால், அங்கு கழிப்பறை வசதிகளோ அல்லது உரிய சிற்றுண்டிச்சாலைகளோ இல்லாமல் அவதியுற வேண்டிய நிலையில் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றி வருகின்ற பஸ் வண்டிகள், பயணிகளை பஸ் நிலையத்தில் இறக்கி விடுவதால், அவர்கள் வசதியாக ரயில் நிலையத்திற்குச் செல்வதற்கும், பஸ்களில் ஏறி திருகோணமலைக்கோ அல்லது மட்டக்களப்பிற்கோ செல்வதற்கும் வசதியாக இருப்பதாகவும், ஆனாலும் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் பயணிகள் பெரும் அலைச்சலுக்கும் சிரமங்களுக்கும் உள்ளாக நேரிட்டிருக்கிறது எனவும் பயணிகள் தெரிவித்துள்ளனர். (அ-சி)

## ஜே.வி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பி. ஆதரவாளர்களான மஞ்சுள, தேவப்பிரிய ஆகியோரே அம்பாந்தோட்டையில் உள்ள கட்டுவெவப் பாலத்திற்கு அருகில் குறித்த அமைச்சரின் ஆள்களால் கடத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)


கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் Graphic Designer பிரிவின் பணியாளரான இதயராஜா அவர்களின் அன்புத் தந்தை

பொன்னுத்துரை யோகேஸ்வரராஜா

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் நிர்வாகத்தினரும், பணியாளர்களும்.



லேசர் பிறிண்டிங் 6/-
ரைப் செற்றிங்
டிசைனிங்
A3 Printing
Auto CAD Printing
செய்து கொள்ளலாம்
அஸ்வினி மல்ரி பிளாசா
72, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு



MIS Don't MISs IT குழந்தைகளுக்கான கணினிக்கல்வி
Computer Center
#74, சபாபதி வீதி தலையாழி யாழ்ப்பாணம். TPNO: 060 221 6083
For Grade 1,2,3,4,5
Tux Paint
Photoshop
Power Point
Flash MX
Windows OS
Corel Draw
Illustrator
Cool 3D
Video Studio
Hardware
முற்றுமுழுதான செய்முறைப் பயிற்சி
அச்சடித்த பாடக் குறிப்புகள்
500/= per month
பெற்றோர்களே ! உங்கள் குழந்தைகளுக்கு அடிப்படையிலிருந்து கணனிக்கல்வி வழங்க விருப்பமா?
மாணவர்களுக்குத் தனித்தனியான வசதியான நேரங்கள்
Be practical as well as theoretical in IT. Don't MISs IT.
BY R.Kumaran - B.Sc.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமி[illegible] கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - திருமலை


கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## விஞ்ஞானம் - I


**34-T-I**

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

01. பின்வரும் இரு கட்டமைப்புக்களிலும் காணப்படும் ஒற்றுமையான இயல்புகளைக் குறித்துநிற்கும் விடயம்,
   1) கலச்சுவா காணப்படும்.
   2) பச்சையம் காணப்படும்.
   3) கலமுதலுரு காணப்படும்.
   4) உண்மைப் புன்வெற்றிடம் காணப்படும்.





02. அருகில் உள்ள ஒழுங்கமைப்பு சிறிதுநேரம் ஓய்வில் வைக்கப்படின் பெறப்படும் அவதானம்,
   1) வாசிப்பு 50mm ஆக இருக்கும்.
   2) வாசிப்பு 50mm இலும் குறைவு.
   3) வாசிப்பு 50mm ஐ விடக் கூட.
   4) வாசிப்பு 0 ஆகும்.





03. அருகில் மனித சமிபாட்டுத் தொகுதியின் பகுதி ஒன்றின் அமைப்பு காட்டப்பட்டுள்ளது. இப்பகுதி தொடர்பாகச் சரியான கூற்று,
   1) இவ்வமைப்பு மழமழப்புத்தசையால் ஆனது - சுற்றுச்சுருக்க அசைவைக் காட்டும்.
   2) இவ்வமைப்பு இதயத்தசையால் ஆனது - சுற்றுச்சுருக்க அசைவைக் காட்டும்.
   3) இவ்வமைப்பு வன்கூட்டுத்தசையால் ஆனது - சுற்றுச்சுருக்க அசைவைக் காட்டும்.
   4) இவ்வமைப்பு மழமழப்புத்தசையால் ஆனது - சுருக்கல் அசைவைக் காட்டும்.




04. மனிதனில் சுவாசச் செயன்முறை நிகழும்போது நெஞ்சறைக் கூட்டில் ஏற்படும் அசைவு காட்டப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டின்போது நிகழாதது,
   1) விலாஎன்பு முன்நோக்கி அசையும்.
   2) பிரிமென்றட்டு மேல்நோக்கி அசையும்.
   3) நெஞ்சறையின் கனவளவு கூடும்.
   4) பிரிமென்றட்டு கீழ்நோக்கி அசையும்.




05. குருதிமயிர்த்துளைக் குழாயின் வன்கூட்டுத்தசைக் கலங்களுக்கு குருதி விநியோகம் நிகழ்வதைப் படம் காட்டுகின்றது. இங்கு S என அடையாளப்படுத்தப்பட்ட கூறு எது?
   1) திரவ இழையம்.
   2) இழைய பாய்மம்.
   3) செங்குழியம்.
   4) நிணநீர்.




06. நீண்டகாலமாக குழந்தை பெற்றுக்கொள்ளமுடியாத பெற்றோர்கள் செயற்கை முறையில் பரிசோதனைக்குழாய் சிசுக்களை Test tube baby பெறுகின்றனர். இதன் போது நிகழும் செயற்பாட்டில் சரியானது,
   1) சூலகத்தினுள் உள்ளபோதே சூல்வித்துடன் இணையச்செய்யப்படும்.
   2) சூல், விந்து என்பன புறச்சூழலில் கருக்கட்டச் செய்யப்படும்.
   3) சூல், விந்து என்பன புறச்சூழலில் இணையவிடப்பட்டு கருப்பையில் பதிக்கப்படும்.
   4) புறச்சூழலில் பதிக்கப்பட்ட பின்பு கருப்பையில் கருக்கட்டச் செய்யப்படும்.

07. அருகில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கமைப்பின் மூலம் ஒளித்தொகுப்புத் தொடர்பான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வின் படிமுறைகள் வருமாறு:
   a - நீர்கொண்ட முகவையினுள் ஐதரில்லா தாவரம் இடப்பட்டது.
   b - ஐதரில்லா தாவரம் நிலைப்படுத்துவதற்காக பேப்பர்கிளிப் பயன்படுத்தப்பட்டது.
   c - நீரில் சிறிதளவு $NaHCO_3$ சேர்க்கப்பட்டது.
   d - ஒளிரும் மின்விளக்கின் மூலம் முகவை வைக்கப்பட்டது.




மேற்படி செயன்முறைகளில் ஒளித்தொகுப்பிற்குச் செல்வாக்குச்செலுத்தும் காரணிகளை வழங்கும் செயற்பாடு,
1) a, b 2) b, c 3) c, a 4) a, d


08. கைவிரலில் தீக்குச்சியால் வெப்பம் பெறப்படும்போதுமூளையால் வெப்பத்தை உணர்வதற்கு ஏற்ற பாதை,
   1) புலன் → இயக்க நரம்பு → இடைத்தூது நரம்பு → புலன் நரம்பு → விளைவு காட்டி.
   2) புலன் → புலன் நரம்பு → இடைத்தூது நரம்பு → இயக்க நரம்பு → விளைவு காட்டி.
   3) விளைவுகாட்டி → புலன் நரம்பு → இடைத்தூது நரம்பு → இயக்க நரம்பு → புலன்.
   4) புலன் → இடைத்தூது நரம்பு → இயக்க நரம்பு → புலன் நரம்பு → விளைவு காட்டி.

09. செவிச்சிற்றென்பினால் செய்யப்படும் தொழில்,
   1) செவிப்பறை மென்சவ்வைப் பாதுகாத்தல்.
   2) உட்செவியின் பகுதிகளைப் பாதுகாத்தல்.
   3) செவிப்பறை மென்சவ்வுக்குள்ளே இருக்கும் அமுக்கத்தை வளிமண்டல அமுக்கத்துக்குச் சமனாக்குதல்.
   4) செவிப்பறை மென்சவ்வில் இருந்து கிடைக்கும் அதிர்வுகளை விரியலாக்கி உட்செவிக்குக் கடத்துதல்.

10. கூர்ப்பு நடைபெறும் விதத்தை விளக்குவதற்கு டாவின் எடுத்துரைத்த இயற்கைத் தேர்வுக் கொள்கையின் படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றின் சரியான ஒழுங்கு,
   a - தக்கன பிழைத்தல். b - மாறல்கள்.
   c - மிகையுற்பத்தி. d - போட்டி.
   1) a, b, c, d 2) b, c, a, d 3) c, b, d, a 4) b, d, a, c

11. அருகில் உள்ள படம் உணவுச்சங்கிலி ஒன்றின் திணிவுக்கூம்பகத்தைக் காட்டுகின்றது. பின்வரும் எச்செயற்பாடு திணிவுக்கூம்பகத்தில் குறையை ஏற்படுத்தும்?
   1) சமிபாடு. 2) வளர்ச்சி.
   3) ஒளித்தொகுப்பு. 4) சுவாசம்.

12. கீழே தரப்பட்டுள்ள வரைபடம் மாதவிடாய் வட்டத்தின் போது கருப்பை அகவணியின் தடிப்படையும் நிலையைக் காட்டுகிறது. வட்டத்தின் எந்நிலையில் கருக்கட்டும் செழிப்பான நிலை காணப்படும்?
   1) A 2) B 3) C





13. பொதுவாக அல்லுலோகங்கள் குறைந்த உருகுநிலையையும் கொதிநிலையையும் கொண்டவை. எனினும் காபன், வைரம் ஆகியன அல்லுலோகங்கள். எனினும், அவற்றின் கொதிநிலை, உருகுநிலை ஆகியன உயர்வாக இருப்பதற்குக் காணரமாக அமைவது,
   1) அவை மினுக்கம் கொண்டவையாகக் காணப்படல்.
   2) அவை உலோக இயல்பு, அல்லுலோக இயல்பு கொண்டவையாக இருத்தல்.
   3) அவற்றினூடாக மின்னோட்டம் கடத்தப்படல்.
   4) அவை சாலகங்களால் ஆனவையாக இருத்தல்.

14. ஆய்வுகூடத்தில் $H_2CO_2$ ஆகியன முறையே வளியின் கீழ்முகப் பெயர்ச்சி, மேல்முகப்பெயர்ச்சி ஆகிய முறைகளில் சேகரிக்கப்படும். இவ்வாறு சேகரிப்பதற்கு உதவும் இயல்பு,
   1) ஐதரசன் வாயு, காபனீரொட்சைட்டு வாயு ஆகியன வளியிலும் இலேசானவை.
   2) வளியானது ஐதரசன் வாயு, காபனீரொட்சைட்டு வாயு ஆகியவற்றை விட இலேசானதாகும்.
   3) காபனீரொட்சைட் வாயு வளியைவிட இலேசானதாகவும், ஐதரசன் வாயு வளியை விட நிறை கூடியதாகவும் இருப்பதாகும்.
   4) ஐதரசன் வாயு வளியைவிட இலேசானதாகவும் காபனீரொட்சைட்டு வாயு வளியைவிட நிறை அதிகமானதாகவும் இருப்பதாகும்.


15. உலோகங்களின் தாக்கவீதத்தின் அடிப்படையில் ஆய்வுகூடத்தில் இலகுவாக மேற்கொள்ளக்கூடிய இரசாயனத் தாக்கம் பின்வருவனவற்றுள் எது?
   1) $Cu + Fe^{2+} \rightarrow Cu^{2+} + Fe$ 2) $Fe + Cu^{2+} \rightarrow Fe^{2+} + Cu$
   3) $Pb + Mg^{2+} \rightarrow Pb^{2+} + Mg$ 4) $Fe + Mg^{2+} \rightarrow Fe^{2+} + Mg$

16. தீயணைகருவி ஒன்றின் மாதிரிப்படம் அருகே காட்டப்பட்டுள்ளது. இது எவ்வகையான தீயணை கருவியாகும்?
   1) நீர்த் தீயணைகருவியாகும்.
   2) சோடாஅமிலத் தீயணைகருவியாகும்.
   3) காபனீரொட்சைட்டுத் தீயணைகருவியாகும்.
   4) நுரை தீயணைகருவியாகும்.




17. கூற்று: பாடசாலை ஆய்வுகூடத்தில் ஏற்படும் திடீர்த் தீயைக் கட்டுப்படுத்த உலர்தூள் தீயணைகருவி மிகச் சிறந்ததாகும்.
   காரணம்: உலர்தூளைத் தீயின்மீது இடும்போது சுவாலையில் நடைபெறும் இரசாயனத் தாக்கம் தடைப்படும். மேலும் தகனத்துணை கிடைக்கப்பெறல். எரிபற்றுநிலை ஏற்படலைத் தடுத்தல் ஆகியன மூலமாக தீ அணைக்கப்படும். மேலே தரப்பட்டுள்ள கூற்று, காரணம் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளும்போது,
   1) கூற்று உண்மையானது; காரணம் பொய்யானது.
   2) கூற்று பொய்யானது, காரணம் உண்மையானது.
   3) கூற்று, காரணம் இரண்டும் உண்மையானவை. ஆனால், காரணம் சரியான விளக்கமாக அமையவில்லை.
   4) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் உண்மையானவை. ஆனால், சரியான சரியான விளக்கமாக அமைந்துள்ளது.


18. வரிப்படத்தில் மெழுகுதிரிச் சுவாலையின் வலயங்கள் காட்டப்பட்டுள்ளன. இங்கு வலயம் B இல்,
   1) நிறைதகனம் நடைபெறும்.
   2) பகுதித்தகனம் நடைபெறும்.
   3) ஒட்சிசன் வாயுவுடன் எரிபொருள் கலக்கப்படும்.
   4) தகனமடையாத வாயுக்கள் அடங்கியிருக்கும்.




19. பெரிசயனைட்டு, நீர் ஆகியன கொண்ட ஜெலிநிலை ஊடகத்தில் இரும்பு ஆணியில் செப்புக்கம்பி ஒன்று தொடுகையுறுமாறு வைக்கப்பட்டுள்ள விதம் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. இங்கு செப்புத்துண்டுக்குப் பதிலாக மக்னீசிய நாடாத் துண்டு ஒன்று தொடுகையுறுமாறு வைக்கப்பட்டால், எவ்வாறான மாற்றத்தை அவதானிக்கமுடியும்.
   1) ஊடகத்தில் நீலநிறம் அற்றுப்போகும்.
   2) இரும்பு ஆணிக்கு அண்மையில் நீலநிற மற்றும் மக்னீசிய துண்டுக்கு அண்மையில் இளஞ்சிவப்பு நிற மாற்றமும் ஏற்படும்.
   3) இரும்பு ஆணிக்கு அண்மையில் இளஞ்சிவப்பு நிறமாற்றமும் மக்னீசியத் துண்டுக்கு அண்மையில் நீலநிற மாற்றமும் ஏற்படும்.
   4) ஊடகத்தில் இளஞ்சிவப்புநிறம் அற்றுப்போகும்.





20. $CaCO_3$ ஆனது கட்டிகளாக உள்ளபோதா/தூளாக உள்ளபோதா ஐதான HCL உடன் மிக விரைவாக இடைத்தாக்கமடையும் என முடிவுசெய்வதற்கான பரிசோதனையின் போது உருவாகும் வாயுவைச் சேகரிப்பதற்கான 3 உபகரணத் தொகுதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன. வெளியேறும் வாயு வேறு வாயுக்களுடன் கலக்காதிருத்தல், வெளியேறும் வாயுவின் கனவளவை இலகுவாக அளவிடக்கூடியதாக இருத்தல். பயன்படுத்தக்கூடிய வசதி, குறைந்தளவு நேரம் எடுத்தல் ஆகிய இயல்புகள் கொண்ட வாயுச்சேகரிப்பு உபகரணத்தொகுதியாக அமைவது,




1) A 2) B 3) C 4) A, C

21. மாறா வெப்பநிலையின் கீழ் நிலையான வளித்திணிவு ஒன்றின் அமுக்கத்திற்கும் கனவளவுக்கும் இடையிலான தொடர்பைச் சரியாகக் காட்டும் வரைவு எது?




22. ஒருமுனை திறந்தநிலையில் உள்ள சிறிய துளையைக்கொண்ட கண்ணாடிக் குழாயினுள் 1cm நீளமான இரசநிரல் சிறைப்படுத்தப்பட்டு கிடையாக வைக்கப்

தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்.......


"2009 க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்காக பல மாவட்ட பிரபலங்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான படைப்பு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச்சுடரின் தொடர்ச்சி.....

பட்டுள்ளது. இந்நிலையில் வளிமண்டல அமுக்கம் 76cm இரசநிரல் ஆயின், இக் குழாயை நிலைக்குத்தாக நிமிர்த்தியும், தலைகீழாகவும் வைக்கும்போது சிறைப் பட்டுள்ள வளிநிரலின் அமுக்கங்கள் முறையே இரச cm இல்,

1) 74, 76  2) 74, 78
3) 78, 74  4) 78, 76





23. 36g நீரை ஆக்க மூலகங்களாகப் பிரிகையடையச்செய்யும்போது கிடைக்கும் விளைவுகள் யாவை? (H = 10, O = 16)
1) 18g ஐதரசனும், 18g ஒட்சிசனும்.
2) 4g ஐதரசனும், 32g ஒட்சிசனும்.
3) 12g ஐதரசனும், 24g ஒட்சிசனும்.
4) 32g ஐதரசனும், 24g ஒட்சிசனும்.


24. பின்வரும் இரண்டு சந்தர்ப்பங்களையும் கருத்திற்கொள்க.
A - இரைப்பையின் அமிலச்சுரப்பினால் ஏற்படும் கோளாறை நிவர்த்திசெய்தல்.
B - உயிருள்ள இழையங்களில் ஏற்படும் காயங்களைத் தொற்றுநீக்குதல்.
மேலே தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களுக்கான பரிகரிப்புப் பதார்த்தங்களான அமைவன முறையே,
1) அமில எதிரி, எழுகலெதிரி.  2) கிருமிகொல்லி, அழுகலெதிரி.
3) அழுகலெதிரி, அமில எதிரி.  4) அமில எதிரி, கிருமிகொல்லி.

25. இயற்கை இறப்பரின் அடிப்படை ஆக்கக்கூறு,
1) குளுக்கோசு.  2) ஐசோபிரின்.
3) அமினோஅமிலம்.  4) செலுலோசு.


26. படத்தில் உள்ள ஆடி,
1) வளைவுமையம் X ஐக்கொண்ட குழிவாடி.
2) வளைவுமையம் X ஐக்கொண்ட குவிவாடி.
3) குழியம் X ஐக்கொண்ட குழிவாடி.
4) குழியம் X ஐக்கொண்ட குவிவாடி.





27. A, B ஆகியவற்றின் குவியத்தூரங்கள் முறையே 10cm, 15cm எனின், A, B இற்கு இடையிலான தூரம்,
1) 5cm  2) 15cm
3) 12cm  4) 25cm





28. படத்தில் 3Ω, 5Ω தடைகள் தொடராக இணைக்கப்பட்டுள்ளன. A, B இற்கிடையில் உள்ள அழுத்த வித்தியாசம் 6V எனின், A, C இற்கிடையில் உள்ள அழுத்த வித்தியாசம் யாது?
1) 2.5v  2) 10v
3) 12v  4) 16v





29. இழை ஒன்றில் உண்டாக்கப்பட்ட அலை படத்தில் தரப்படுகின்றது. அதன் அலை நீளம், வீச்சம் என்பன முறையே,
1) 30cm, 3cm  2) 40cm, 3cm
3) 60cm,3cm  4) 40cm, 6cm





30. பின்வருவனவற்றுள் ஒளிக்கதிரின் பாதையைச் சரியாகக் காட்டுவது எது?

1) 



2) 


3) 



4) 



31. திரவம் ஒன்றின் அடர்த்தி $300kgm^{-3}$. இத்திரவத்தில் 2m ஆழத்தில் அமைந்துள்ள புள்ளியில் திரவத்தினால் உண்டாகும் அமுக்கம், ($g = 10Nkg^{-1}$)
1) $1,600Nm^{-2}$  2) $800Nm^{-2}$  3) $600Nm^{-2}$  4) $160Nm^{-2}$


32. கீழே தரப்பட்டுள்ளவற்றில் x, y புள்ளிகளின் சமவலுத்தடைகள் சமனானவை,
1) a, b  2) b, c  3) c, d  4) a, d






33. 1kg திணிவுடைய இரும்புத்துண்டு ஒன்று (4) படத்திற் காட்டியவாறு விற்றராசில் கட்டித் தொங்கவிடப்பட்டு உள்ளது. ஆரம்பத்தில் முகவையில் உள்ள நீர்மேற்பரப்பில் இரும்புத்துண்டின் அடிப்பகுதி மட்டமாக தொடுகையுற்றுள்ளது. முகவை படிப்படியாக உயர்த்தப்பட்டது. முகவையின் வெவ்வேறு நிலைகளில் விற்றராசின் வாசிப்புக்கள் குறிக்கப்பட்டன. முகவையின் நிலைகளுக்கு எதிராக விற்றராசின் வாசிப்புக்கள் குறிக்கப்பட்டுப் பெறப்படும் வரைபின் பருமட்டான வடிவத்தைத் தருவது,





1) 


2) 


3) 


4) 



34. புகையூட்டப்பட்ட கரிய மேற்பரப்பையும், மழமழப்பான மேற்பரப்பையும் கொண்ட இரு சம அளவான சோதனைக்குழாய்கள் படத்தில் காட்டியவாறு போக்குக் குழாயுடன் இணைத்துப் பிரகாசமான சூரியஒளியில் வைத்தால் நிறமூட்டிய திரவமானது,
1) A பக்கமாக நகரும்.
2) B பக்கமாக நகரும்.
3) ஒருபக்கமும் நகராது.
4) A யின் பக்கமும் B யின் பக்கமும் சம அளவில்




35. கட்டித்தொங்கவிடப்பட்ட மணல்கொண்ட பொலித்தீன் உறையானது அலையவிடப்படும்போது அது அலையும் தளத்திற்குச் செங்குத்தாக கடதாசிக்கீலம் இழுக்கப்படுகிறது. கடதாசிக்கீலத்தில் விழுந்த மணலின் கோலத்தைப் படம் (11) காட்டுகிறது. படம் (11) இல் AB, DE நீளங்கள் தங்கியிருப்பது,
1) கடதாசி இழுக்கப்படும் வேகம்.
2) பொலித்தீன உறையின் அதிர்வின் வீச்சம்.
3) கடதாசி இழுக்கப்படும் வேகத்திலும், பொலித்தீன் உறையின் அதிர்வின் வீச்சத்திலும்.
4) கொட்டும் மண்ணின் வேகத்தில்.

36. பின்வருவனவற்றுள் எக்கூட்டம் ஒரேவகையைச் சேர்ந்த இசைக்கருவிகளைக் கொண்டுள்ளது?
1) வயலின், கிற்றார், நாதஸ்வரம்.  2) கிற்றார், மத்தளம், எக்காளம்.
3) வயலின், கிற்றார், சித்தார்.  4) றபான், மத்தளம், வயலின்.

37. 100kg திணிவுடைய சுமை ஒன்றை மிகவும் இழிவான விசை ஒன்றினைப் பயன்படுத்தி உயர்த்துவதற்குப் பின்வரும் அமைப்புக்களில் எதனைப் பயன்படுத்த வேண்டும்? (அமைப்புக்களின் விசையின் பகுதிகளின் உராய்வு புறக்கணிக்கத்தக்கது என்க. L சுமையையும், E ஊக்கவிசையையும் குறிக்கின்றது.




38. இயற்கை நிகழ்வுகளின் எதிர்வுகூறல் தொடர்பாக விலங்குகள் காட்டும் துலங்கலின் பின்னணியில் விஞ்ஞான உண்மைகள் ஏதும் உண்டா என அறிவதற்குத் தகவல் திரட்ட மாணவன் ஒருவன் விரும்பினான். அவனது முயற்சியுடன் தொடர்புபடாத இயற்கை நிகழ்வு - துலங்கல் எதிர்வுகூறல் சோடியாக அமைவது,
1) மழை - குருவிகள் தாழப்பறந்து ஒலி எழுப்புதல்.
2) எரிமலை வெடித்தல் - கறையான்கள் புற்றிலிருந்து வெளியேறுதல்.
3) சுனாமி - தவளை கத்துதல்.
4) நில அதிர்வு ஏற்படல் - யப்பான் பூனைமீன் (Japan cat fish) வாற்செட்டையைத் தரையில் தொட்டுச்செல்லல்.

39. இலங்கையில் பன்றிக்காய்ச்சல் பரவக் காரணம்,
1) இலங்கையில் பன்றிகள் வளர்க்கப்படுகின்றமை.
2) நோய்த்தொற்றுக்கு உள்ளானவர் இலங்கையில் குடிபுகுதல்.
3) நுளம்பு மனிதனைக் கடித்தல்.
4) சேறுகளில் நோய்க்கிருமி தோன்றுதல்.

40. மாணவர்களிடையே வளர்க்கப்படவேண்டிய விஞ்ஞான மனப்பாங்குகள் தொடர்பாக நான்கு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - எந்தவொரு இயற்கைத் தோற்றப்பாட்டையும் விஞ்ஞானமுறையில் விளக்க முடியும்.
B - விஞ்ஞான விதிகளைப் புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ தயாராக இருத்தல்.
C - புதிய கருத்துக்களை வெளியிடுபவருக்கு மரியாதைசெய்துகொள்ளல் வேண்டும். எனவே, அக்கருத்தை அப்படியே ஏற்றல்.
D - ஆய்வு ஒன்றில் ஈடுபடும்போது குறித்த ஆய்வினை மீண்டும் மீண்டும் பல தடவை மேற்கொண்டு அவற்றிலிருந்து இறுதிமுடிவிற்கு வருதல்.
இவற்றில் பொருத்தமானது,
1) A, B, C  2) A, C, D  3) A, B, D  4) A, B, C, D


# விஞ்ஞானம் - II

**34-T-II**

## பகுதி A - அமைப்புக் கட்டுரை வினாக்கள்

* **பகுதி Aஇல் நான்கு வினாக்களிற்கும் தரப்பட்ட இடத்தில் விடை எழுதவும்.**
* **பகுதி Bஇல் உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் பிரிவுகளில் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதவும்.**

01. A. பட்டாணிக் கடலைத்தாவரம் பல்வேறுபட்ட உறல் பொருள் இயல்புகளைக் கொண்டிருப்பதனால் கிரகர் மெண்டல் தனது பரிசோதனைகளில் பட்டாணிக் கடலைத் தாவரத்தைப் பயன்படுத்தினார். பட்டாணிக் கடலைத் தாவரமானது ஒளித்தொகுப்பின் மூலம் ஒளிச்சக்தியை தனது உடலில் பதிக்கின்றது. மாணவன் ஒருவன் பட்டாணிக் கடலைகளைப் பயன்படுத்தி நீரை வெப்பமேற்றுவதற்கு முயற்சி செய்தான். அதற்காக அவனால் பயன்படுத்தப்பட்ட உபகரண ஒழுங்கமைப்பு காண்பிக்கப்பட்டுள்ளது.




1) பட்டாணிக் கடலைத்தாவரத்தின் தாவரவியல் பெயரைக் குறிப்பிடுக.
2) பட்டாணிக் கடலைத்தாவரம் காண்பிக்கும் உறல் பொருள் இயல்புகள் 2 தருக.
3) மெண்டல் தனது பரிசோதனையின்போது தூய வழி நெட்டைத்தாவரத்தையும் தூய குட்டைத் தாவரத்தையும் கலப்புப் பிறப்பாக்கம் செய்த படி முறைகள் கீழ் உள்ள அமைப்பு காண்பிக்கின்றது.

B. புவி அதிர்வின் காரணமாக இன்று பல்வேறு நாடுகளில் பாரிய அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. எனவே, இவ் அனர்த்தங்களை தவிர்ப்பதற்காக புவி அதிர்வு தொடர்பான முன் எச்சரிக்கை அமைப்புக்கள் சகல நாடுகளிலும் உருவாக்கப்படல் வேண்டும்.




1) a. புவி அதிர்வின்போது தோற்றுவிக்கப்படும் அலைகளைக் குறிப்பிடுக.
b. படத்தில் காட்டப்பட்ட P, Q, R, S ஆகிய அவதானிப்பு நிலையங்கள் யாவற்றிலும் உணரப்படும் அலை எது?
c. இவ் அலைகளில் மிகவும் வேகமாக பயணம் செய்யக்கூடிய அலை வகை எது?

தொடரும்.....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavahaham.org